OKULAM
ஜூலை 2010 • 80 பக்கங்கள் • விலை ரூ. 8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



அனிமேஷன் அட்டகாசம்!

4 படக்கதைகள்!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1676


1677


1678


1679


1680


1681


1682


1683


1684


1685



1686


1687


1688


1689


1690


1691


1692


1693


1694


1695


1696


1697


1698


1699


1700

பெயர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

கோகுலம்

ஜூலை 2010 மலர் : 28 இதழ் : 6

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்



உயர்த்தும் உற்சாகம்!

டியர் குட்டீஸ்,

படிப்பில் சிலர் மிக அதிகமான மதிப்பெண் எடுக்கிறார்கள். விளையாட்டில் ிலர் அசாதாரணத் திறமை பெற்றிருக்கிறார் ள். இசை, ஓவியம், பாட்டு, விளையாட்டு... ன்று எந்தத் துறையைப் பார்த்தாலும், ப்படிப்பட்ட திறமைசாலிகளைக் காண் றோம். அவர்களால் மட்டும் எப்படி வ்வாறு சாதனை செய்ய முடிகிறது?

ரொம்பச் சின்ன விஷயம்தான்; தன் ுடைய விருப்பமாக அதை ஆக்கிக் கொள்வது!

எதில் நம்மால் அதிகக் கவனத்தைச் செலுத்த முடிகிறதோ, அதில் நாம் அதிகமான திறனைப் பெறுகிறோம். அர்ச்சுனன், இரவிலும் அம்பு எய்யும் யிற்சியை மேற்கொண்டான் என்கிறது மகா ாரதம். 'வில்லுக்கு விஜயன்' என்ற சிறப்பின் அடித்தளம், அவன் வில் பயிற்சியில் கொண்டிருந்த ற்சாகம். இது, புராணச் செய்தி!

இருபது ஆண்டுகளுக்கு மேல் விளையாடி, உலக கிரிக்கெட்டில் பல்வேறு சாதனை ளைச் செய்தவர் சச்சின் டெண்டுல்கர். அவர், இன்றும் ஒவ்வொரு போட்டிக்கு முன்பும், டைவிடாத பயிற்சியை மேற்கொள்கிறார். இது இன்று நாம் காணும் டைமுறை உண்மை!

ஒவ்வொரு வெற்றிக்கும், புகழுக்கும் பின்னே, இப்படிப்பட்ட ற்சாகமும், உழைப்பும்தான் மறைந்திருக்கின்றன. இதைப் ரிந்துகொண்டு பின்பற்றினால், உங்கள் வெற்றியும், புகழும் கச் சிறப்பாக அமையும்.

அன்புடன்,
கோகூ





''ரிப்போர்ட்ல உள்ள கையெழுத்து உங்க அப்பாவோடது மாதிரி இல்லையே!''

''உங்களுக்கு சந்தேகமா இருந்தா, இப்பவே போட்டு காட்டுறேன் மிஸ்.''

- பி.அனுஷியா, எஸ்.எஸ்.கே.வி. மே.நி. பள்ளி, காஞ்சிபுரம்



பழி... பாவம்..!

''பழி ஓரிடம் பாவம் ஓரிடம்னு சொல்றது நிஜம்டா.''

''என்ன சொல்றே?''

''தப்புத் தப்பா கணக்கு போட்டுத்தர்றது எங்கப்பா..கம்மியா மார்க்கு வாங்கறது நான்.''


- ராம.மம்தாராம், உ. எண் 1091, டால்மியாபுரம்



''டிரைவர், இவ்வளவு வேகமாகக் காரை ஓட்டாதே. பயமா இருக்கு.''

''பயப்படாதீங்க ஸார். வேகமாகப் போகும்போது என்னைப் போலவே நீங்களும் கண்ணை மூடிக்கங்க.''

- ர.தினேஷ்குமார், உ. எண் 1080, நம்பியூர்



"டாக்டர், ஹோட்டல்ல சாப்பிட்டா
னக்கு கையை வலிக்குது."

"பொய் சொல்லாதீங்க. வயிறுதானே
லிக்கும்?"

"மாவாட்டினா எப்படி வயிறு வலிக்கும்?"

- பி.பரத், உ. எண் 1257,
சிதம்பரம்



- கே.ஜெ.ஷிஃபானா அஃப்ஸின், உ. எண் 913, கூத்தாநல்லூர்

கோகுலம்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!



அனிமேஷன் அட்டகாசம்!


கணினி சார்ந்த அச்சகத் துறையிலும், மென்பொருளை வடிவமைப்பதிலும், கனடா நாட்டைச் சேர்ந்த 'கோரல் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனம் உலகப் புகழ் பெற்றது. இந்த நிறுவனம் தயாரித்துள்ள, 'கோரல் பெயிண்டர்' என்ற மென்பொருள், அனிமேஷன் படங்கள் மற்றும் கேரிகேச்சர் எனப்படும் கேலிச் சித்திரங்களை கணினியில் வரைவதற்கு அவசியமான ஒன்று. சில மாதங்களுக்கு முன்பு, கோரல் கார்ப்பரேஷனின் வடிவமைப்பு இயக்குனரான ஜெரார்டு மெட்ரலா-கோரல் பெயிண்டர் மென்பொருளின் புதிய பதிப்பை வெளியிட சென்னைக்கு வந்திருந்தார். அப்போது

எட்டாவது படிக்கும் ஒ சிறுமியை அவருக்கு அறிமுகப்படுத் னார்கள். 'டிஜிட்டல் கேரிகேச்சர்க வரைவதில் இந்தச் சிறுமி 'எக்ஸ்பர் என்றார்கள். ''சரி, உலகத் தலைவ ஒருவரை கேரிகேச்சர் வரைந்து காட்டு என்றார் ஜெரார்டு. உடனே செயல்பட துவங்கினாள் சிறுமி. அவளின் கை டிஜிட்டல் பேனாவுடன் டிஜிட்ட பலகையில் விளையாட, கணினி திவ யில் கோடுகள். நாற்பத்தைந்தே நொ களில் கோடுகளை இணைத்து கெ கொடுக்கப்பட்டு முன்னாள் அமெரிச் ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் திரையி தோன்றினார்! பார்த்தவர்கள் வியந்



ப்ரியன்

ஆனால் சுகாதாரத் துறையில் வேலை. காலப் போக்கில் அனிமேஷன் துறையில் எனக்கு நாட்டம் ஏற்பட்டது. என் சுய முயற்சியில் கேரிகேச்சர்கள், அனிமேஷன் குறும்படங்கள் ஆகியவற்றை எடுக்கக் கற்றுக் கொண்டேன். இரண்டு வருடங்களுக்கு முன் என் இரண்டாவது மகள் சிந்துஜா, தனக்கும் அனிமேஷன் மீது ஆர்வம் என்று சொல்லவே




பானார்கள். ஜெரார்டு எக்ஸெலண்ட், ர்வலெஸ்'' என்று சிறு யைத் தட்டிக் கொடுத் ர். ''இந்தத் துறையில் திர்காலச் சொத்து ந்தச் சிறுமி'' என்று ராட்டினார்.

அசத்திய அந்தச் று மி சிந்துஜா. ன்னை முகப்பேர் பலம்மாள் பள்ளியில் டிக்கிறாள். 'ஆங்கர் னிமேஷன்' என்ற நிறு னத்தை நடத்தி வரும் துராஜாவின் அப்பா ஜமாறன்,

''எனக்கு ஓவியத் ் ஆர்வம் அதிகம்.

அவளுக்கும் கற்றுத் தந்தேன். விரைவில் கற்றுக் கொண்டாள். அவளது வேகத்தைக் கண்டு நானே வியந்து போகிறேன்'' என்கிறார்.

டிஜிட்டல் பலகையைப் பயன்படுத்திக் கணினி திரையில் கோடுகளைப் போட்டு கேலிச் சித்திரங்களை (கேலி கேச்சர்) உருவாக்க, புத்திசாலித்தனமும் கற்பனை வளமும் இணைந்து செயல்பட வேண்டும். ''எங்களுக்காக ஒரு கேரி கேச்சர் வரைந்து காட்டு



சிந்துஜா'' என்றவுடன் நொடிகளில் திரையில் முதல்வர் கருணாநிதி கேரிகேச்சரில் சிரிக்கிறார். ஏ.ஆர்.ரகுமான், அப்துல் கலாம் என்று நிறையப் பிரபலங்களின் டிஜிட்டல் கேரிகேச்சர்கள் சிந்துஜாவின் கைவண்ணத்தில் உருவாகின்றன. கணினியில் அவர்களை வரையும்போது, கோரல் பெயிண்டர் மென்பொருளுடன் 'அடோப்' நிறுவனத்தின் மென்பொருளையும் பயன்படுத்துகிறார்.

''அனிமேஷன் படங்கள் தயாரி பதற்கு அதிகக் கால அவகாச தேவைப்படும். ஒரு சிறிய அனிமேஷ படம் தயாரிக்கக்கூட தொடர் உழைப்பு அர்ப்பணிப்பும் தேவை'' என்கிற ராஜமாறன்.

சிந்துஜா காசநோய் குறித் எடுத்துள்ள இரு பரிமாண (2 அனிமேஷன் படம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாம். உலகச் செம்மொ மாநாட்டினையொட்டி, அனிமேஷ படப்போட்டி ஒன்றை சிறுவர், சிறு யருக்காக நடத்தியிருக்கிறது தமிழ அரசு. அந்தப் போட்டியில் நிமிடங்களில் ''ஈன்ற பொழுதி பெரிதுவக்கும் தன் மகனைச் சா றோன் எனக் கேட்ட தாய்'' என் குறளின் பொருளை விளக்கு அனிமேஷன் படத்தைத் த ரித்துக் கொடுத்து அசத்தியிரு கிறாள் சிந்துஜா.

எதிர்காலத்தில் அனைவரு வியக்கக் கூடிய வகையி அனிமேஷன் படங்களை தயாரிக்க வேண்டும் என்ப சிந்துஜாவின் லட்சியம். இப்போது ஒ பதாவது படிக்கும் சிந்துஜாவை, அ மேஷன் துறையில் கவனம் செலுத் வசதியாக, தேவைக்கேற்ப விடுப் கொடுத்து வருகிறது பள்ளி நிர்வாக அதுமட்டுமல்ல; 'உலக வெப்பம மாதல்' குறித்த முப்பரிமாண அனிமே ஷன் குறும்படம் ஒன்றையும் தயாரித்து கொடுக்கச் சொல்லியிருக்கிறது. இ போது அதில் பிஸியாக இருக்கிற சிந்துஜா. படிப்பிலும், யோகாசனங்க செய்வதிலும் கூட அசத்துகிறாள் இ சிறுமி. சபாஷ்!

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா
நினைவுச் சிறுகதைப் போட்டி 2010



மொத்தப் பரிசுத் தொகை ரூ.2000/-

முதல் பரிசு	ரூ.1000/-
இரண்டாம் பரிசு	ரூ.500/-
மூன்றாம் பரிசு	ரூ.500/-

(ரூ.250/- வீதம் இருவருக்கு)

சிறுவர் இலக்கியத்துக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவாக இவ்வாண்டும் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது. கலந்து கொண்டு சிறப்பியுங்கள்.

நிபந்தனைகள் :


- இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 வரை) மட்டுமே கலந்து கொள்ள முடியும். ஆகவே போட்டிக்குக் கதையை அனுப்புவோர், கண்டிப்பாகப் படிக்கும் வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.
- கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சமூகம், நகைச்சுவை, ப்பறிதல் என்று எந்த வகையாகவும் இருக்கலாம். **உங்கள் சொந்தக் கற்பனைதான் ன்ற உறுதிமொழிக் கடிதத்தைக் கதையுடன் இணைக்க வேண்டும்.**
- பிரசுரத்துக்குத் தேர்வாகாத கதையைத் திருப்பி அனுப்ப இயலாது. ஆகவே, தபால் லைகளை இணைக்க வேண்டாம். ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் னுப்பலாம்.
- அயல்நாட்டில் வசிப்பவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியை ளிக்க வேண்டும். கதைகளை முதல்முறை வெளியிடும் உரிமை கோகுலத்துக்கே. றகு இதன் உரிமை கதாசிரியரைச் சாரும்!
- போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும்வரை வேறு இதழ்களுக்கு னுப்பக்கூடாது.
- போட்டி முடிவு வெளியாகும்வரை கடிதப் போக்குவரத்தோ, விசாரிப்போ கூடாது. பாட்டி குறித்து எழும் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் அளிக்கும் ர்ப்பே இறுதியானது.

முடிவுத் தேதி : 31.8.2010

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கோகுலம்,
அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி - 2010
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032


அதீ
கதை, படம் :
பிள்ளை
என்ன சத்தம்? போய்ப் பார்க்கலாம்?
அட... ரெண்டு பேர் சண்டை போடறாங்க... புகுந்து விளையாட லாம்.
நிறுத்துங்க. என்ன பிரச்னை? நான் தீர்த்து வைக்கிறேன்.
கிராமத்துக்குப் போயி இந்த தயிர்ப் பானையை ரெண்டு பேரும் தூக்கி வந்தோம்.
சரி!
தயிராக் குடிக்காம, வெண்ணெய் எடுத்து சாப்பிட நினைச்சோம்.
நல்ல யோசனை. அதுக்கு ஏன் சண்டை!


அதுக்கு உன் உதவியை கேட்கலாம்னேன். ஆனா, இவன்...
நீ உதவ மாட்டேன்னு சொல்லி, உன்னை கேலி பண்றான். அதான் சண்டை!
குரங்கண்ணா, என்னைப் போய் தப்பா நினைக்கலாமா? உதவி செய்யவே பிறந்தவன் நான்....
அப்படியா ஆதி. ஸாரி. உன்னை தப்பா நினைச்சுட்டேன். நீ ஹெல்ப் பண்ணுறியா?
ஓ.கே.
சரி; நண்பா; தயிர் கடைய மத்து ரெடி.
சீக்கிரம் ஆதியை கூட்டிக்கங்க. வேலையைத் தொடங்கலாம்.
என்னைத் தாம்புக் கயிறாவா ஆக்கப் பார்த்தீங்க? எங்கே.. வேகமா ஓடி ஓடி, கடையுங்க இப்போ!



அறிவிய

கோவை மாவட்டம், மேட்டுப் பாளையம் அருகே உள்ள 'சிறுமுகை'யில் இயங்கி வருகிறது ஸ்ரீ விஜயலக்ஷ்மி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி.


இந்தப் பள்ளியின் மாணவர்கள் பங்கேற்ற, பட்டிமன்றத்தின் சுருக்கம் இது.

பள்ளி முதல்வர் பால்ராஜ் : ''நாம் அனைவருமே பேனாவைப் பயன்படுத்துகிறோம். கணக்கெழுதவும், கையெழுத்திடவும் நாம் பயன்படுத்தும் இதே பேனாதான், கவிஞனிடமிருந்து கவிதையை வடிக்கிறது; எழுத்தாளரிடமிருந்து இலக்கியமாய்ப் பெருக்கெடுக்கிறது. உங்கள் பேனா இலக்கியங்களின் தோற்றுவாயாக விளங்கட்டும்!''

தமிழ்த்துறைத் தலைவரான ஆர்.ஜெயபாரதி நடுவர் பொறுப்பை ஏற்க, பன்னிரண்டு மாணவ, மணிகள் பட்டிமன்றத்தில் பங்கேற்றனர். 'அறிவியலின் கண்டுபிடிப்புகள் தருவது ஆக்கமா, அழிவா' என்ற பொருளில் நடைபெற்றது பட்டிமன்றம்.

சங்கீதா : ''அறிவியல் வளர்ச்சி ஆக்கம்தான். முன்பெல்லாம், முதலில் தேர்வு முடிவு வரும். பல நாட்களுக்குப் பிறகு மதிப்பெண் பட்டியல் வரும். இப்போ, அப்படியா? ரிசல்ட் வந்த வேகத்துலயே, மதிப்பெண்களையும் தெரிஞ்சுக்கறோம்.


* சங்கீதா

* சக்தி ஞானவேல்



* சுவாதிகா

* அகிலாண்டேஸ்வரி




* முதல்வர் பால்ராஜ்

ார்வை!

இது அறிவியலால் வந்ததுதானே. பத்திரிகைல வரதுக்கு முன்னால், இன்டர்நெட்ல பார்த்துட முடியுதுல்ல; அப்போ, இதை அழிவுன்னு சொல்றதை எப்படி ஒத்துக்க முடியும்?''

சுவாதிகா : ''நிஜம்தான். உடனே ரிசல்டை பார்த்துடலாம். ஆனா, இன்டர்நெட் அதுக்கு மட்டுமா பயன்படுது? ஆபாசப் படங்களை வெளியிட்டுப் பலரோட வாழ்க்கையைப் பறிபோகச் செய்வதும் அதுதான். தீவிரவாதிகள் பயன்பாட்டுக்குப் பயன்படுத்தறதும் இதைத்தான். மனித மனத்தின் விகாரங்களும், வக்கிரங்களும் ஏகமா பரவிக் கிடக்கறதும் இதுலதான். இதை ஆக்கம்னு எப்படிச் சொல்ல முடியும்?''



* விக்னேஷ்வரா

அகிலாண்டேஸ்வரி : ''எலிக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல்னு புதுசு புதுசா நோய்கள் வருது. ஆனா, அதுக்கு

ஸ்ரீ விஜயலக்ஷ்மி அறக்கட்டளையின் சார்பில் நடைபெறும் இந்தப் பள்ளியில், மிக எளிய பின் தங்கிய கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். இவர்களுக்கும் உயர்தரமான கல்வி கிடைக்குமாறு செய்பவர், இந்த அறக்கட்டளையின் தலைவரான ஆறுமுகசாமி. ஏழைக் குழந்தைகளின் கல்விக்கான இந்த அறப் பணியில், தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். பத்தாம் வகுப்பு மற்றும் ப்ளஸ் 2 பொதுத்தேர்வில், அதிக மதிப்பெண் பெற்றும், உயர் கல்வி பெறப் பொருளாதார வசதியற்ற மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கி வருகிறார் இவர்.



* ஆறுமுகசாமி

மருந்து கண்டுபிடிச்சது அறிவியல்தானே! மக்கள் தொகை பெருகினாலும், நிலவுல குடியேறலாம்னு சொல்ற அளவுக்கு, ஆக்கபூர்வமா வளர்ந்துகிட்டிருக்கு அறி வியல்.''

விக்ன ஜோஷ்வா : ''நொடியில் ஒரு நாட்டையே பேரழிவுக்கு உள்ளாக்கும் ஆயுதங்கள் எதனால் விளைந்தவை? அணுக்கதிர் வீச்சும், விஷ வாயுத் தாக்கு தலும் எதனால் உண்டானவை? வேதிக் கழிவுகளால் உண்டாகும் நோய்களுக்கு எது காரணம்? இப்படிப் பார்த்தால், அறிவியல் அழிவுக்கே அடித்தளம் என்பது புரியும்.''

மலர்விழி : ''அறிவியல் தொடர் பில்லாத பொருள் என்ன இருக்கிறது? நாம் பயன்படுத்தும் பேனா முதல், பவுடர், லோஷன், கிரைண்டர், வாஷிங் மெஷின், மின் விளக்குகள்... எல்லாமே அறிவியலின் கொடைதான். இதை ஏற்கத்தான் வேண்டும்.''

ஆகாஷ் : ''ஓசோன் படலத்தில் ஓட்டை, பூமி வெப்பமடைதல், துருவங் களில் பனி உருக ஆரம்பித்தல்... இவையெல்லாம் அறிவியலால் உண் டான ஆபத்து. அறிவியல் கண்டுபிடிப்பு கள் இன்னொரு விதத்தில், இயற்கையைக் கூறு போட்டுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, தொலைக்காட்சி, குடும்ப உறுப்பினர்களிடையே நெருக்கத்தைக் குலைத்துவிட்டது.''

ரேஷ்மா : ''தொலைக்காட்சியோ, செல்ஃபோனோ முறையாகப் பயன் படுத்தினால், பிழையில்லை. உலகின் ஏதோ மூலையில் உள்ளவர்களையும் தொடர்பு கொள்ள, நிகழ்வுகளை அறிய இவை உபயோகப்படுகின்றன. பயன் தெரிந்து பயன்படுத்த வேண்டியது நம் கடமை!''

திவ்ய மனோகரன் : ''செல்ஃபோன் பயன்பாட்டினால் மூளை பாதிக்கப்படு கிறது என்கிறார்கள். விபத்துகள் அதி கரிக்கின்றன. இன்னொரு வகையில், மனிதனின் இயல்பான ஞாபக சக்திகூட இதனால் இழக்கப்படுகிறது என்பது பெரும் அழிவுக்கான அடையாளம்.''

ஹரிமகேஷ் : ''கண்கள், சிறுநீரகம், இதயம் என்று உடலின் பகுதிகளைப் பொருத்தி, உயிர்களைக் காப்பது அறிவியல்; 'ஸ்டெம் செல்' கண்டுபிடிப்பு இன்னுமொரு அற்புதம்; ஏன்? நம் பயணங்கள் எளிதானதும் அறிவிய லால்தான்.''


சபரீஷ் : ''மருத்துவம்னா பக்க விளைவுகள்; ரூபாய்னா கள்ள நோட்டு கள்... இப்படி எந்த வகையில் பார்த்



* மலர்விழி

* ஆகாஷ்





* திவ்ய மனோகரன்

* சௌம்யா



தாலும், விஞ்ஞானம் தந்த வளர்ச்சியைவிடச் சேதம்தான் அதிகம். அணு மின்சாரம்னு சொன்னாலும், கதிர்வீச்சு அபாயத்தை மறுக்கவே முடியாது.''

சௌம்யா : ''அறிவியல், உலகைச் சுருக்கியிருக்கிறது; வேலை வாய்ப்புகளைப் பெருக்கியிருக்கிறது. உலகின் பல நாடுகளில் நம் தேசத்தவர்கள் பணிபுரிகிறார்கள் என்றால், அது அறிவியல் கொடுத்த வாய்ப்பின்றி வேறென்ன?''

சக்தி ஞானவேல் : ''குடிநீர்த் தேவை என்று நிலத்தடி நீரை உறிஞ்சியாச்சு; அதனால பூமியில வெடிப்பு வருது. தொழிற்சாலைக் கழிவு நீரை ஆறுகள்ல கலந்து சுற்றுச் சூழலை மாசு பண்ணியாச்சு. காற்றையும் மாசு படுத்தியாச்சு இதுதான் ஆக்கமா?''

நடுவர் தீர்ப்பு :

''ஒரே ஒரு பென்சிலின் (penicillin) பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியது. இது வரலாறு. பிளேக், அம்மை, மலேரியா, இளம் பிள்ளை வாதம்... இப்படிப் பல நோய்களை ஒடுக்கியது அறிவியல். அண்ட வெளியில் உள்ள கோள்களில்



* நடுவர் ஜெயபாரதி

மனிதன் வாழ வகையுண்டா என்பது முதல் அன்றாடத் தேவைகள் வரை அறிவியல் ஆராய்ந்துகொண்டே இருக்கிறது. 'ஸ்டெம் செல்'லைக் கொண்டு, செயற்கைக் கல்லீரலை உருவாக்கியிருக்கிறார்கள். இப்படி எடிசன், ஐன்ஸ்டீன், கிரஹாம் பெல் போன்ற விஞ்ஞானிகளின் உழைப்பும் தேடலும்தான் இன்று நாம் காணும் வசதிகள் அனைத்தும். ஒரு பொருளின் பயன்பாடு, அதைப் பயன்படுத்துபவரைப் பொருத்தே இருக்கிறது. காய்கறி நறுக்கப் பயன்படும் கத்தியை, ஒருவன் கொலைக்கு உபயோகப்படுத்தினான் என்றால், அது கத்தியின் குற்றம் இல்லை. அந்தப் பார்வையில் அறிவியலை அணுகக் கூடாது. அறிவியல் என்பது ஆக்கத்தை நோக்கியே செயல்படுகிறது. அதில் எந்தச் சந்தேகமும் இல்லை.



* ரேஷ்மா



* ஜஸ்வி மகேஷ்



* சபரீஷ்

தொகுப்பு : பாலா
படங்கள் : யுவராஜ்

'மெஸ்ஸி

'என்னுடைய வாரிசு என்று இவரைத்தான் நான் குறிப்பிடுவேன். அச்சுஅசலாக என்னைப் போலவே ஆடுகிறார்.' கால்பந்து ஆட்டத்தின் மேதை என்றழைக்கப்படும் மரடோனா, தம் நாட்டைச் சேர்ந்த 23 வயது மெஸ்ஸியை பற்றிச் சொன்ன புகழுரை இது!

17 வயதில் அர்ஜெண்டினாவுக்காக ஆட ஆரம்பித்த மெஸ்ஸி 19-வது வயதில் உலகக்கோப்பைப் போட்டியில் ஆடிப் புகழ் பெற்றார். 2009-ல் உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருது மெஸ்ஸிக்கு வழங்கப்பட்டது. ரொனோல்டோ, காகா போன்ற புகழ்பெற்ற வீரர்களைத் தோற்கடித்தே இந்தப் பட்டத்தை அவர் வென்றிருக்கிறார்.

*உஷா-சிஷ்யையுடன்




'யார் வேண்டுமானாலும் சிறந்த விளையாட்டு வீரராக ஆகலாம். ஆனால், என் மகன் எல்லோரும் விரும்பும் பிள்ளையாக இருப்பதே எனக்குக் கூடுதல் சந்தோஷத்தைத் தருகிறது' என்று தமிழகத்தின் பொக்கிஷமான விஸ்வநாதன் ஆனந்தின் வெற்றி (உலக சாம்பியன் போட்டி) குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் அவர் அம்மா சுசீலா விஸ்வநாதன்.


சில வருடங்களுக்கு முன்பு 'பெண்டிட் லைக் பெக்காம்' என்றொரு படம் வெளி வந்து இங்கிலாந்தின் புகழ்பெற்ற கால்பந்து வீரரான டேவிட் பெக்காமுக்குப் பெருமை சேர்த்தது. இப்போது அவர் ஒரு காமிக்ஸ் புத்தகத்தின் ஹீரோவாக்கப்பட்டிருக்கிறார். 'ஃபேம், டேவிட் பெக்காம்' என்ற காமிக்ஸ் புத்தகத்தில் டேவிட் பெக்காமின் வாழ்க்கை வரலாறு, சித்திரங்கள் வழியே சொல்லப்பட்டிருக்கிறது.



டேவிட் பெக்காம்



*பெல்ப்ஸ்





*வீனஸ் சகோதரிகள்

நீச்சல் வீரரான பெல்ப்ஸ் இதுவரை 14 ஒலிம்பிக் தங்கங்களை வென்றுள்ளார். பீஜிங் ஒலிம்பிக்கில் எட்டு தங்கங்களை

ச.ந.கண்ணன்

அள்ளி உலக சாதனை செய்த பெல்ப்ஸ், 2012 லண்டன் ஒலிம்பிக்ஸுக்குப் பிறகு ஓய்வு பெற்றுவிடுவேன் என்று சமீபத்தில் அறிவித்திருக்கிறார். அதேபோல லண்டன் ஒலிம்பிக்ஸில் பீஜிங் சாதனையை (8 தங்கங்கள்) முறியடிக்கத் தாம் முயற்சி செய்யப்போவதில்லை என்றும் கூறியிருக்கிறார்.



*ஃப்ரான்செஸ்கா சியாவோன்

வில்லியம்ஸ் சகோதரிகள் ஃப்ரெஞ்ச் ஓப்பன் சிங்கிள்ஸ் போட்டியில் தோற்றுப் போனாலும், இருவரும் இரட்டையர் ஆட்டத்தில் பட்டம் வென்றுள்ளனர். தர வரிசைப் பட்டியலில் இவர்கள் இருவருக்கும் முதலிடம் கிடைத்துள்ளது.

டோனா



இத்தாலியைச் சேர்ந்த ஃப்ரான்செஸ்கா சியாவோன் (Francesca Schiavone) இந்த வருட ஃப்ரெஞ்ச் ஓப்பன் போட்டியை வென்றுள்ளார். 29 வயதான இவர், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 26 வயது வீராங்கனை ஸ்டோசரை தோற்கடித்தார். போட்டி முடிந்தபிறகு சியாவோன் ஸ்டோசரிடம் சொன்னார்: - "நீ இளம்பெண். இன்னும் பல வெற்றிகள் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன".

*விஸ்நாதன் ஆனந்த்



பி.டி. உஷாவின் சிஷ்யையான 'டிண்டு லுகா' (Tintu Luka), 800 மீ ஓட்டப்பந்தயத்தில் இந்திய அளவில் சிறந்த வீரராக இருக்கிறார். 'விரைவில் 800 மீ ஓட்டப்பந்தயத்தில் ஷைனி வில்சனின் தேசிய சாதனையை முறியடித்து விடுவார். அடுத்ததாக ஏஷியன் கேம்ஸ், ஒலிம்பிக்ஸ் என இரண்டு போட்டிகளிலும் இந்தியாவுக்குப் பதக்கம் வாங்கித் தருவார்' என்று தம் சீடர் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார் உஷா. ●

'புறா' மொழி!

கதை : ஆர்.ஆசிக் அகமது, உ. எண் 1157, கம்பம்   படம் : பிள்ளை





பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்கவேண்டும். உள்ளூர்க் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032

கட்டுரை

ஐஜாஜல் ஜோகுல் (Eyjafjall jockull) என்ற பெயரைக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? கடந்த மார்ச் மாதம் முதல் பத்திரிகைகளில் இடம் பெற்ற ஐஸ்லாந்தில் உள்ள எரிமலையின் பெயர் இது! பிரிட்டனுக்கு வடமேற்கில் வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள தீவுகளைக் கொண்ட ஐரோப்பிய நாடு இந்த ஐஸ்லாந்து! இங்குள்ள எரிமலை விசிறிய 'லாவா' பல மீட்டர் தூரத்துக்குப் பரவியுள்ளது. அதைத் தொடர்ந்து நான்கு கி.மீ தூரத்துக்கு சாம்பலும் தூசியும் பறந்தன.

தொடர்ந்து ஏப்ரல் மாதம் நடந்த வெடிப்பின்போது, எரிமலைக் குழம்பு காட்டாறு போலப் பாய்ந்து பரவியது. இந்த சமயத்தில் 250 மில்லியன் கியூபிக் மீட்டர் அளவுக்கு, சாம்பல் மற்றும் குழம்பை வெளியேற்றியது இந்த எரிமலை. சுமார் ஒன்பது கிலோமீட்டர் உயரத்துக்கு வாண வேடிக்கை நடத்திக் காட்டியுள்ளது.

பனிமலைகளும், அவற்றிலிருந்து வழிந்து வரும் பனி ஆறுகளும், அழகிய மரக்கூட்டமுமாக சுற்றுலாவுக்குரிய அழகுடன் திகழும் ஐஸ் லாந்தில்தான், இந்த எரிமலைகளும்! இந்தச் சீற்றத்தின் முதல் பாதிப்பு, விமானப் போக்குவரத்துக்கே என்றாலும், எரிமலை விசிறிய தூசியும்



முனைவர் ஆசுரா

'லாவா'வும் ஆறுகளில் பரவி வெள்ளப் பெருக்கை ஏற்படுத்துகின்றன. அங்குள்ள தாவரங்கள், விலங்குகள், மீன்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. எரிமலை வெடிப்பால் பனியாறுகள் மேலும் உருகி, காட்டாறுகளாகப் பாய்ந்து கொண்டிருக்கின்றன. இதைவிடப் பெரிய ஆபத்து ஒன்றும் உண்டு.

இப்போது வெடித்துள்ள எரிமலையின் அருகே உள்ள மற்றொரு எரிமலை 'காட்லா'. ஐரோப்பாவின் மிகப் பெரிய எரிமலைகளில் இந்த 'காட்லா'வும் ஒன்று. இந்த எரிமலை கற்குழம்பை வெளியிட்டபோதெல்லாம், 'காட்லா'வும் எரிமலைக் குழம்பை உமிழ்ந்திருக்கிறது. இதன் வாய்ப்பகுதி சுமார் பத்து கி.மீ விட்டம் கொண்டது.

இது கற்குழம்பை வெளியிடத் தொடங்கினால், பனியாறுகள் உருகி மிகக் கடுமையான வெள்ளச் சேதம் ஏற்படும் என்கிற பீதியில் இருக்கிறார்கள் அனைவரும். புவியியல் ஆய்வாளர்கள் 'காட்லா'வின் மீது கண் பதித்தபடிக் காத்திருக்கிறார்கள். புவி வெப்பமயமாதலைத் தடுக்க வேண்டும் என்று உலக நாடுகள் முனைந்து கொண்டிருக்கின்றன. ஆனால், ஐஸ்லாந்தில் நடந்த 'எரிமலை' விளையாட்டில், நாம் பார்வையாளராக இருந்து பதிவு செய்ய மட்டுமே முடிந்திருக்கிறது. இயற்கை நம்மைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது என்பது புரிகிறதல்லவா!



தீப்பிடித்த ஐஸ்!

நெடுங்கவிதை

எங்க ஊரு மாரியம்மன் கோயிலில்
இன்று முதல் எட்டு நாளும் திருவிழா
செங்கரும்பு தேங்காய்ப் பழம் விற்பனை
செடலும்கூட வந்திருக்கு அற்புதம்!

வண்ண வண்ணப் பலூன்காரர் வருகிறார்
வாங்கி வாங்கிச் சிறுவரெல்லாம் ஊதுறார்!
அண்ணன்கூட புல்லாங்குழல் வாங்கினார்
அம்மா அக்கா வளையல் வாங்கிப்
போடுறார்!

சத்தம் போட்டு வானொலியும் பாடுது!
சனங்கள்கூட்டம் கோயிலுக்குள் போகுது!
வித்தைகாட்டி காசு சிலர் கேட்பரே
வேண்டுதலில் பக்தர் பலர் நடப்பரே

அம்மன் கோயில் தேரு வருது பாருங்க.
அதுக்கு முன்னால் யானை வருது பாருங்க.

தேர்த்



திருவிழா!

அம்மா அக்கா அண்ணன் தம்பி கூடியே
அம்மன் தேரின் வடம் பிடிக்க வாருங்க!

கோவிலெங்கும் கூட்டம் அலை மோதுது
கொள்ளை இன்பம் மனங்களிலே மேவுது!
பூவு பொட்டு பொரிகடலை வாங்கியே
பெண்கள் கூட்டம் வீட்டைத் தேடிப் போகுது!

நானும்கூட ரயிலு வண்டி வாங்கினேன்
நல்ல சிவப்புநிற காரு ஒண்ணும் வாங்கினேன்!
மானைப் போல துள்ளிக் குதித்து ஓடினேன்
மகிழ்ச்சியிலே என்னை மறந்து பாடினேன்

ராத்திரியைப் பகலாக்கும் விளக்குகள்
ராட்டினத்தில் சுற்றுகிற பிள்ளைகள்
வாத்தியங்கள் எழுப்புகிற இன்னிசை
வழியெங்கும் உற்சாகப் பெருநிலை!



மலரடியான்



இந்திரன் தோட்டம்!

இந்தியாவின் இரண்டாவது மிகச் சிறிய மாநிலம் சிக்கிம். இது கடல் மட்டத்தில் இருந்து 350 மீ. முதல் 8540 மீ வரையிலான இமயமலையின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. உலகிலேயே மூன்றாவது உயரமான சிகரமான கஞ்சன்ஜங்கா, சிக்கிம் - நேபாள எல்லைப் பகுதியில் அமைந் துள்ளது. புராணங்களில் சிக்கிம் பகுதி 'இந்திரகில்' அதாவது 'இந்திரனின் தோட்டம்' என்று குறிப்பிடப்படுகிறது.

சிக்கிம் என்பது லிம்பு மொழியில் புதிய என்ற பொருள் கொண்ட 'சு', மாளிகை என பொருள் கொண்ட 'கைம்' என்ற இரண்டு வார்த்தைகளைக் கொண்டு உருவான பெயர். சிக்கிமை திபெத்திய மொழியிலும் 'புதியாஸ்' மொழியிலும் 'டெஞ்சாங்' என்று சொல் கிறார்கள். இதற்கு 'அரிசிப் பள்ளத்தாக்கு' என்று பொருள்.

மாநிலத்தின் பரப்பளவு சுமார் 7,100 ச.கி.மீ. இதற்கு வடக்கிலும், கிழக்கிலும் திபெத், மேற்கே நேபாளம், தென் கிழக்கில் பூட்டான் ஆகிய நாடுகள் உள்ளன. சிக்கிமிலிருந்து திபெத், பூட்டான், நேபாளம் ஆகிய அண்டை நாடுகளுக்குச் செல்ல இமய மலையில் எட்டு கணவாய்கள் அமைந் துள்ளன. வடக்கு சிக்கிம், தெற்கு சிக்கிம், கிழக்கு சிக்கிம், மேற்கு சிக்கிம் என்று நான்கு மாவட்டங்களைக் கொண்டது இந்த மாநிலம். ஒவ்வொரு மாவட்ட மும் நிர்வாக வசதிக்காக இரண்டு

கௌதம் ராம்



* குரு ரிம்போசே (Guru rimpoche)

தாலுக்காக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

சிக்கிமின் மக்கள்தொகை ஐந்து லட்சத்து 41 ஆயிரம். இதில் இரண்டு லட்சத்து 89 ஆயிரம் பேர் ஆண்கள். இரண்டு லட்சத்து 52 ஆயிரம் பேர் பெண்கள். ஆயிரம் ஆண்களுக்கு 875 பெண்கள் என்ற விகிதம் நிலவுகிறது. எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 69 சதவிகிதம்.

வரலாறு மற்றும் கலாசார அடிப்படையில், நேபாளி, புதியா, லெப்சா, லிம்பு, நியுவாரி, ராய், குருங், மங்கார், ஷெர்பா, தமங், சன்வார் என்று மொத்தம் பதினொரு மொழிகள் அதிகார பூர்வ மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர பள்ளிக்கூடங்களிலும், அரசாங்க நடைமுறைகளுக்கும் ஆங்கிலமும் பயன்படுத்தப்படுகிறது.

இந்துமதமும், வஜ்ராயண பௌத்த மதமும் மாநிலத்தின் முக்கிய மதங்கள். தலைநகரமான காங்டாக், சிக்கிமின் மிகப் பெரிய நகரமும்கூட. பொருளாதாரம் விவசாயத்தையும், சுற்றுலாப் பயணிகளையுமே பிரதானமாக நம்பியுள்ளது. ஆனாலும் ரயில் பாதைகளோ, விமான நிலையமோ இங்கு கிடையாது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் குரு நூரிபோஷ், இங்கு பௌத்தமதத்தை அறிமுகப்படுத்தியதாகத் தெரிகிறது. 14ஆம் நூற்றாண்டில் கிழக்கு திபெத்திலிருந்து வந்த 'கையி பும்சா' என்ற

இளவரசன் சிக்கிமில் ஆட்சி புரிந்தான். அவனது பரம்பரை தொடர்ந்து ஆட்சி புரிந்தது என்கிறது வரலாறு.

1947ல் இந்தியா சுதந்திரம் அடைந்த சமயத்தில் சிக்கிம் இந்தியாவுடன் இணைய மறுத்துவிட்டது. பிறகு 1975-ல் பொதுமக்களின் விருப்பத்துக்கேற்ப இந்திய மாநிலமானது.

குளிர்காலத்தில் சாலைகளில் ஏராளமான பனி பொழிந்து போக்குவரத்துத் தடை ஏற்படுவதும், மழைக்காலத்தில் நிலச்சரிவு காரணமாக ஊர்கள் முற்றிலுமாகச் சில நாட்களுக்குத் தொடர்பு இழப்பதும் இங்கு வழக்கமான விஷயம்.



* ரும்டெக் (Rumtek) பௌத்த மடாலயம்

500 வகையான மலர்ச்செடிகளும், 23 வகையான மூங்கில்களும், 400க்கும் அதிகமான மூலிகை வகைகளும் இங்கு வளர்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவில் காணப்படும் 1440 ரக வண்ணத்துப் பூச்சிகளில் சுமார் 700 ரகங்கள் இங்கு காணப்படுவதாகக் கூறுகிறார்கள் உயிரியல் ஆய்வாளர்கள்.

நெல், கம்பு, கோதுமை, கேழ்வரகு போன்ற தானியங்களும், டீ, ஏலக்காய், ஆரஞ்சு ஆகியவையும் இங்கு விளைகின்றன. இந்தியாவில் மிக அதிகமாக ஏலக்காய் விளையும் மாநிலம் இது. தாமிரம், டாலமைட், சுண்ணாம்பு, கிராஃபைட், குவார்ட்சைட், நிலக்கரி, துத்தநாகம், ஈயம் போன்ற கனிமங்கள் இங்கே கிடைக்கின்றன. கடிகார உற்பத்தி, தோல் பதனிடுதல், மதுபான உற்பத்தி என்று ஒரு சில தவிர, மாநிலத்தில் பெரிய தொழிற்சாலைகள் ஏதுமில்லை.

தீபாவளி, தசரா போன்ற இந்து பண்டிகைகளுடன், திஹார், பீம்சேன் பூஜை போன்ற நேபாளியப் பண்டிகைகளும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. 'லோசர்' என்பது திபெத்தியப் புத்தாண்டு. கால்பந்தும், கிரிக்கெட்டும் பிரபலமான விளையட்டுகள். துக்பா, தந்துக், சௌமெயின், ஃபக்தூ, கியாதுக், வான்டன் போன்ற நூடுல்ஸ் கொண்டு தயாரிக்கப்படும் உணவு வகைகள் மிகவும் பிரபலமானவை.

சிக்கிம் மாநில சட்டசபை 32 உறுப்பினர்களைக் கொண்டது. பாராளுமன்றத்தின் லோக் சபா, ராஜ்ய சபா இரண்டுக்கும் தலா ஒரு எம்.பி. இங்கிருந்து அனுப்பி வைக்கப்படுகிறார். சிக்கிம் ஜனநாயகக் கட்சி, முக்கிய மாநிலக் கட்சி. 2009ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் மாநிலத்தின் 32 தொகுதிகளிலும் அக்கட்சி வெற்றி பெற்று சரித்திரம் படைத்தது.

லு காங்க்தமோ, கா டு கிடோ, சிரிமு, ரெச்சுமா, பி யு மிஸ்டா ஆகியவை சிக்கிமின் பாரம்பரிய நடன வகைகள். அறுவடை முடிந்ததும் வில் வித்தையில் ஈடுபடுவது இங்குள்ள வழக்கம். வில் அம்பு விளையாட்டின் போது அணியும் பாரம்பரிய உடைக்கு 'கோ' என்று பெயர்.

கோகுலம் டைஜஸ்ட்

இந்த டைஜஸ்டில்...



தனிமை விரும்பி!



ஐரோப்பா மிங்க்

பாலூட்டிகள் பிரிவைச் சேர்ந்த விலங்கு மிங்க் (mink). மரநாய்க் குடும்பத்தைச் சேர்ந்த மிங்க், மிகவும் முரட்டுத்தனம் கொண்டது.

ஒரு கோழியே இதன் உணவுக்குப் போதுமானதாக இருந்தாலும், அருகிலிருக்கும் மற்ற கோழிகளை எல்லாம் கொன்று விடும் மூர்க்கத்தனம் இதற்குண்டு. இரையின் தலைப் பகுதியை முதலில் உண்டுவிட்டுத்தான் மற்ற பகுதிகளை உண்ணும்.

இதில் அமெரிக்க மிங்க், ஐரோப்பா மிங்க் என்று இரு வகைகள் உள்ளன. ஐரோப்பியன் மிங்க் இப்போது அதிகம் இல்லை. உடலெங்கும் மிக மிருதுவான கம்பளி ரோமம் அடர்ந்திருக்கும். நீண்ட கழுத்தையும் குட்டையான கால்களையும் கொண்டது. வால் நீளம் நீங்கலாக இதன் உடல் நீளம் 60 செ.மீ. இருக்கும். ஆண் மிங்க் பெண் மிங்க்கை விட உருவத்தில் பெரியது. எடை 900 கிராம். இதன் மென் ரோமம் அடர் பழுப்பு நிறத்திலிருக்கும். கன்னம், தொண்டை, வயிற்றுப் பகுதிகளிலுள்ள ரோமம் வெள்ளையாக இருக்கும். தவிர மேலுறையாக கருமையான நீண்ட எண்ணெய்ப் பசை கொண்ட மயிர் அடர்ந்திருக்கும். இதில் தண்ணீர் ஒட்டாது.

இது ஒரு தனிமை விரும்பி. நீரிலும்,

எஸ்.தணிகைவேல்,
உ. எண் 762, காஞ்சிபுரம்



★ அமெரிக்கன் மிங்க்

நிலத்திலும் வாழும். ஆற்றங்கரையில், சதுப்பு நிலப்பகுதியில் மற்றும் மரப் பொந்திலோ, பாறைப் பிளவிலோ அல்லது ஆற்றங்கரையில் வளை தோண்டியோ வாழும். இரவில் இரை தேடும். இதன் உணவு பறவைகள், மீன்கள் மற்றும் சிறிய கொறி விலங்குகள்.

பெண் மிங்க் குட்டி போடும் முன் வளை தோண்டி புல், இலைகள், தனது உடல் ரோமம் ஆகியவற்றைக் கொண்டு படுக்கை தயாரித்துக் குட்டிபோடும். ஒரு சமயத்தில் நான்கு முதல் 8 குட்டிகள் வரை போடும். பிறந்த குட்டிகள் 4 செ.மீ. நீளம்தான் இருக்கும். கண்களும் தெரியாது. ஐந்த வாரங்களுக்குப் பிறகு குட்டிகளுக்குக் கண்கள் திறக்கும். உடலெங்கும் கம்பளி முடி தோன்றிவிடும். ஏழு வாரங்களுக்குப் பிறகு குட்டிகளும் தாயுடன் இரை தேடும். தேவைக்கு அதிகமாகவே வேட்டையாடிக் குவிக்கும். இதன் ஆயுட்காலம் பத்து ஆண்டுகள்.

குட்டையான கம்பளி மயிர் அடர்ந்த தோலுக்காக இதை வளர்க்கிறார்கள். கறுப்பு, வெள்ளை மற்றும் பழுப்பு நிறங்களில் இதன் தோல் விற்கப்படுகிறது. ரஷ்யாவும், ஸ்காண்டிநேவிய நாடுகளும் இதன் வளர்ப்பில் முன்னணியில் உள்ளன.

பல ஆண்டுகள் பண்ணைகளில் வளர்ந்தாலும், இதன் மூர்க்கத்தனம் குறையவே இல்லை. பண்ணையில் உணவு கொடுக்க வரும்போது உணவிடுபவரின் கையைக் கடித்துவிடும் சுபாவம் இதற்கு உண்டு!

முள்மரம்

''பையங்ககிட்டே சில குணக்குறைபாடுகள் இருக்கலாம். அதைச் சரி செய்யணும்னு நினைச்சா, முதல்ல கோபப்படக்கூடாது. அடிக்கறதும், திட்டறதும் மட்டுமே ஒருவனை மாத்திடாது.

அது மரியாதையை ஏற்படுத்தித் தராதுன்னு அவனுக்குப் புரியவைச்சாப் போதும். அவன் மாறிடுவான். கவலையை விடு. நான் பார்த்துக்கறேன்''



சின்னசாமியிடம் சொல்லிவிட்டாரே தவிர, என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தார் வேதாசலம். சின்னசாமி அவரது பள்ளித்தோழன். அவருடைய மகன் வேலன் நன்றாகப் படிப்பவன். அதனாலேயே கர்வம் வந்துவிட்டது அவனுக்கு. எல்லாரையும் எடுத்தெறிந்து பேசும் தன்மை ஏற்பட்டுவிட்டது. அப்போது, சற்று தொலைவில் வேலன் வருவதைப் பார்த்தார் வேதாசலம். அவரிடம் மிக மரியாதையாக நடந்து கொள்வான் வேலன்.

'என்ன வேலா, ஏதும் அவசர வேலையா? நான் ஆத்துப்பக்கம் போறேன். வரியா?' என்றார்

அவனுடன் பேசியபடி, வெயில் வேளையில் ஆற்றோரமாய் மரநிழலில் நடப்பதே ஆனந்தமாக இருந்தது. வேறு விஷயங்களைப் பேசிக்கொண்டு வந்த வேதாசலம் சட்டென்று அங்கிருந்த தென்னை மரத்தைக் காட்டிக் கேட்டார்:

''உனக்கு இந்த மரத்தைப் பிடிக்குமா?'' வேலன் உடனே சொன்னான்: ''ஓ, மிகவும் பிடிக்கும். இது இளநீர் தருகிறது. தேங்காய் தருகிறது. வீட்டுக்குக் கூரை தருகிறது. எண்ணெய் தருகிறது.''

'பலே' என்ற வேதாசலம் அடுத்து வாழை மரத்தைக் காட்டிக் கேட்டார். அதற்கும் மிகுந்த உற்சாகத்துடன் பதில் சொன்னான் வேலன்: ''இது வாழைக்காய், வாழைப்பழம், வாழைப்பூ, வாழைத்தண்டு, வாழையிலை என்று எல்லாம் தருகிறது. இதையும் எனக்குப் பிடிக்கும்.''

அடுத்து அங்கிருந்த கருவேல மரத்தைக் காட்டிக் கேட்டார்: ''இந்த மரத்தை உனக்குப் பிடிக்குமா?'' ''இல்லை. எனக்குப் பிடிக்காது'' உடனே பதில்

சொன்னான் வேலன்.

"ஏன் வேலா, இதை வேலிகட்டப் பயன்படுத்துகிறார்கள். விறகுக்கும், வீடு கட்டவும் இது பயன்படுகிறதே?" என்றார் வேதாசலம். உடனே வேலன் சொன்னான்: "உண்மைதான். ஆனால்,



இதில் முள் இருக்கிறதே. அதனால் எனக்குப் பிடிக்காது".


அதைக் கேட்ட வேதாசலம் அவனைத் தட்டிக்கொடுத்தபடியே சொன்னார்: "நீ சொன்னது முற்றிலும் சரியானது வேலா. எவ்வளவு பயனுள்ளது என்றாலும், முள் காரணமாக கருவேல மரமே உன் வெறுப்புக்குரியதாக ஆகிவிட்டது பார்த்தாயா? அதேமாதிரி, நாம் எவ்வளவு திறமை பெற்றிருந்தாலும் நம்மிடம் அடக்கமும், பணிவும் இல்லையென்றால் யாருக்குமே நம்மைப் பிடிக்காமல் போய்விடும். சரியா?"

புதிய பாடம் படித்த தெளிவு, வேலனின் முகத்தில் ஏற்பட்டிருந்தது.

-ஏ. சுந்தரராஜன்,
உ.எண்.1158,
திருக்கழுக்குன்றம்

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



விடைகள் : 1.ஆமையின் தலை 2.உணர் கொம்பு 3.கால் 4.ஒட்டகச் சிவிங்கி உடலில் புள்ளிகள் 5. வால்

தெரியுமா?

✱ இவர் போர்ச்சுக்கலில் 1984-ஆம் ஆண்டு மார்ச் 21-ம் தேதி பிறந்தார்.

✱ இவர் போர்ச்சுக்கல் அணியின் நட்சத்திரக் கால்பந்தாட்ட வீரர் மற்றும் போர்ச்சுக்கல் அணியின் கேப்டன்.

✱ இவர் 2008-ஆம் ஆண்டு, அந்த ஆண்டின் சிறந்த வீரர் விருது, ஐரோப்பாவின் தலைசிறந்த வீரர் மற்றும் தங்கப்பந்து விருது ஆகிய விருதுகளைப் பெற்றார்.

✱ இவரை ரியல் மாட்ரிட் அணி 6 ஆண்டுகளுக்கு 650 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுத்தது.

✱ போர்ச்சுக்கல் அணியில் இவருடைய ஜெர்சி நம்பர் 17; ரியல் மாட்ரிட் அணியின் ஜெர்சி நம்பர் 9.

✱ இவரது கால்களை ரியல் மாட்ரிட் அணியின் உரிமையாளர் புளோரென்டினோபெரஸ் 720 கோடிக்கு இன்சூரன்ஸ் செய்துள்ளார்.

✱ இவர் மான்செஸ்டர் யுனைடெட் அணியிலிருந்து, ரியல் மாட்ரிட் அணிக்கு மாறியபோது வந்திருந்த ரசிகர்களின் எண்ணிக்கை எண்பதாயிரம். இவர் 2009-ம் ஆண்டு அர்சனல் (Arsenel) அணிக்கு எதிராக 40 மீட்டர் தூரத்திலிருந்து hands-kick (free kick) மூலம் கோல் அடித்தார்.

✱ அதற்காக இவருக்கு FIFA அமைப்பு 2009-ஆம் ஆண்டு Beautiful Goal Award-ஐ வழங்கிச் சிறப்பித்தது.

இவர் யார்?

தலைசிறந்த கால்பந்து!





- என்.சம்பத்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்
வித்யாலயா உயர்நிலைப்
பள்ளி, கோயம்புத்தூர்

விடை : கிறிஸ்டியானோ ரொனால்டோ



எண்ணெயில் கோலம்!

I. 1. வாயாடிப் பையன், வாசல்படி தாண்ட மாட்டான் - அவன் யார்?

2. எண்ணெயில் கோலம் போட்டு எடுத்த பின்னல் தட்டு - அது என்ன?

3.வெள்ளிப் பிசிறு உலகை மூடும். வெயில் வந்தால் கரைந்து மறையும். அது என்ன?

4. இருட்டு வந்தால் கூட்டம்; வெளிச்சம் வந்தால் ஓட்டம் - அது என்ன?

5. நான் சென்ற ஊர், நாலெழுத்து ஊர். முதல் எழுத்து நீரில் உண்டு, காரில் இல்லை. இரண்டாம் எழுத்து, கலத்தில் உண்டு, களத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து கிளியில் உண்டு, புளியில் இல்லை. நான்காம் எழுத்து, பொரியில் உண்டு, பொறியில் இல்லை. அது எந்த ஊர்?

6. நிலம் நோக்கி வரும்; நுரை கக்கிச் செல்லும் - அது என்ன?

7. மரமேறும் மங்காத்தாளுக்கு முதுகில் மூன்று கோடு - அது என்ன?

8. மாரி இல்லாமல் ஆமை கெட்டது;

விடுகதைகள்

ஆமை இல்லாமல் சீமை கெட்டது - அது என்ன?

- ஜே.எஸ்.டில்லிபாபு,
பன்னிரண்டாம் வகுப்பு,
சே.சா.மு.ந.மே.நிலைப்பள்ளி,
காஞ்சிபுரம்

II. 1. தாய் குப்பையிலே, மகள் சந்தையிலே. அவை என்ன?

2. கையில் இருந்தால் தடி; பிழிந்து வைத்தால் ருசி. அது என்ன?

- எஸ். வினித் மாதவன்,
உறுப்பினர் எண். 1196, மதுரை

III. 1. ஆள் இல்லாத கிணற்றில் மயில் இறங்கி ஆடுது - அது என்ன?

2. விதையில்லாத செடி. மழையில் பிறந்து, வெயிலில் காயும் - அது என்ன?

3. எங்கிருப்பான் தெரியாது: எப்படி இருப்பான் புரியாது: என்ன சொன்னாலும் திருப்பிச் சொல்வான் - அவன் யார்?

- எம். மிருணாளினி,
உறுப்பினர் எண். 1567,
மதுரை

IV. 1. துணியே போடாதவன் சட்டையைக் கழற்றுகிறான் - அவன் யார்?

2. பாலை ஊற்றினால் காலை சுற்றுவான் - அவன் யார்?

- ம. அக்ஷயா, உ.எண். 1345,
அரூர்

V. 1. நித்திரையின் தூதுவன் நினையாமலே வருவான் - அவன் யார்?

2. தள்ளாடி தள்ளாடி போனாலும்; தவறாமல் கரை சேர்க்கும் - என்ன அது?

3. காற்றால் உயிர் பெறும்; காதுக்கு இனிமை தரும்? - அது என்ன?

4. சலசலவென சத்தம் வரும்; ஆனால், பேச மட்டும் வராது - அது என்ன?

- எஸ். சரஸ்வதி,
பெரிய காஞ்சிபுரம்

விடைகள் :

I. 1.நாக்கு, 2. முறுக்கு 3. பனி, 4. நட்சத்திரம், 5. நீலகிரி, 6 கடல் அலை, 7. அணில், 8. வேளாண்மை

II. 1. வைக்கோல், நெல், 2. கரும்பு

III. 1. துடுப்பு, 2. காளான், 3. எதிரொலி

IV. 1.பாம்பு, 2. பூனை

V. 1.கொட்டாவி, 2. படகு, 3. நாதஸ்வரம், 4. அருவி



மங்கல விழாக்கள் அனைத்திலும் நாதஸ்வரம் ஒலிக்கும் - குறிப்பாக நம் தமிழகத்தில்! திருவாவடுதுறை ராஜரத் தினம் பிள்ளை, காருக்குறிச்சி அருணா சலம்... என்று, நாதஸ்வரம் இசைப்பதில் புகழ் பெற்ற மேதைகள் பலர். ஆனால், கல் நாதஸ்வரம் பற்றித் தெரியுமா? ஆழ்வார்த் திருநகரியில் உள்ள ஆதிநாதர் ஆலயத்தில் இருக்கிறது இந்தக் கல் நாதஸ்வரம். வாசிப்பதற்கு ஏற்றவாறு இதில் துளைகளும் அமைந்துள்ளன.

- எஸ்.தணிகைவேல்,
உ. எண் 762, காஞ்சிபுரம்



கல் நாதஸ்வரம்!

யானை உழவு!

'மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று யானை கட்டிப் போரடித்தார்கள்' என்று - பழங்காலச் மதுரையின் வேளாண்மைச் சிறப்பைச் சொல்வார்கள். ஆனால், உண்மை யாகவே யானையை உழவுக்குப் பயன் படுத்துகிறார்கள் - 'வெள்ளை யானை களின் நாடு' எனப்படும் தாய்லாந்தில்!

- வி.ராமகிருஷ்ணன், தஞ்சை



பெரிய மணி!

உலகின் மிகப் பெரிய மணி, மாஸ் கோவில் உள்ள கிரெம்ளின் மாளிகையில் உள்ளது. Tsar-Bell எனப்படும் இந்த மணி 1733ஆம் ஆண்டு வார்க்கப்பட்டது. 216 டன் எடையும், 6.14 மீட்டர் உயரமும் உடைய இந்த மணியின் வாய் விட்டம் 6.6 மீட்டர். கி.பி. 1836-ல் நிகோலஸ் என்ற மன்னர் ஆட்சி புரிந்த சமயத்தில், இந்த மணி கீழே விழுந்து, அதன் விளிம் பில் ஒரு பகுதி சிதைந்துவிட்டது. இப் போது, ஒரு மேடையின்மீது வைக்கப்பட் டுள்ளது இந்த மணி.


உயரமான அருவி


அருவி என்றதும் நமக்கு குற்றாலம் நினைவுக்கு வரும். ஆனால், உலகி லேயே மிக உயரமான அருவி ஏஞ்சல் அருவிதான். இது வெனிசுலாவில்

உள்ளது. புகழ்பெற்ற நயாகராவைப் போல சுமார் இருபது மடங்கு உயரமானது. 979 மீட்டர் உயரத்தில் இருந்து பெருகுகிறது இந்த அருவி. நயாகராவின் உயரம் 50.2 மீட்டர்தான்.

- ஜி.எஸ்.ஸ்ரீமதி,
உ. எண் 382,
கோபி







பூச்சிப் பொறி

வீனஸ் பூச்சிப் பொறி (Venus flytrap). இந்தச் செடியில் இலைகளின் உட்பக்கத்தில் கருஞ்சிவப்பு நிறம் கொண்ட சுரப்பிகள் இருக்கின்றன. இந்த நிறத்தால் கவரப்பட்ட பூச்சி அதன் மேல் அமர்கிறது. அது இலையில் நகர ஆரம்பித்த உடன், இலையில் உள்ள உணர் ரோமங்கள் தூண்டப்பட்டு இலை மூடிக் கொள்கிறது. அதனால், இலைகளின் ஓரத்தில் உள்ள புரத உணர் ரோமங்கள் பொருந்தி, பூச்சி நசுக்கப்படுகிறது. அதன் சத்துக்கள் உறிஞ்சப்படுகின்றன. செடியின் சாப்பாடு இதுதான்!



- எஸ்.சரஸ்வதி,
பெரிய காஞ்சிபுரம்



ஜே.பி.பாரதி,
எட்டாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி

பெ.அனுசுயா,
எட்டாம் வகுப்பு, எஸ்.எஸ்.கே.வி. மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்





கு.சிவசங்கர்,
உ. எண் 1167, விளாத்திகுளம்

ரா.வைஷ்ணவி,
உ. எண் 625, ஆறாம் வகுப்பு, அம்ரிதா வித்யாலயம்,
செகந்திராபாத்





எஸ்.ஹரிஷ்,
ஏழாம் வகுப்பு, மாண்ட்போர்ட் பள்ளி,
திருச்சி




ஆ.யாதவன்,
உ. எண் 1541, பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு

உங்கள் கைவண்ணம்!


ஆர்.சங்கரி,
எட்டாம் வகுப்பு, கஸ்தூரிபா
காந்தி பாலிகா வித்யாலயா, தருமபுரி





ஆர்.சஹானா,
எட்டாம் வகுப்பு, செயின்ட். பால்'ஸ் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

புள்ளிகளை இணையுங்கள்



கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்

அதிக விளைச்சல்!

கதை : பி.சர்வேஸ்வரன்
உ. எண் 456, மதுரை
படம் : பிள்ளை




கோகுலம்
ஜூலை 2010




மெஸ்ஸி'டோனா

Messi Dona

வகுப்பறைக்குள் நுழையும்போதே பதற்றமாக இருந்தது பாலுவுக்கு. கணித ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். அதுவும் வரைகணிதம் நடத்தும்போது, ஜியோமெட்ரி பாக்ஸ் இல்லையென்றால் கடுமையான கோபம் வரும் அவருக்கு. 'சே, எல்லாம் என் முட்டாள்தனம். ஒரு ரூபாய் ஏமாற்ற நினைத்து, முப்பது ரூபாயைத் தொலைத்துவிட்டேன். இன்று சாயந்திரம் நேரில் சென்று, அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்' என்றும் நினைத்துக் கொண்டான்.

நல்லவேளை. வீட்டுக்கணக்கைத் திருத்துவதிலேயே நேரமாகிவிட்டது.



இன்று தப்பித்தோம் என்று நினைத்த வினாடியில், தலைமை ஆசிரியர் அழைப்பதாகச் சொன்னார் அலுவலக உதவியாளர். 'ஏன் என்னை அழைக்கிறார்?' என்ற கேள்வியோடு, தலைமை ஆசிரியரின் அறைக்குள் நுழைந்த பாலு. அங்கே அமர்ந்திருந்தவரைப் பார்த்துத் திடுக்கிட்டான். யாரைப் பார்த்து மாலையில் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அவன் நினைத்தானோ, அவர்தான் அங்கு அமர்ந்திருந்தார்.

''வா பாலு, படிக்கிற வயசுல இவ்வளவு கவனக்குறைவு ஆகாது. நேத்திக்கு இவர் கடையில ஜியோமெட்ரி பாக்ஸை வெச்சிட்டு

போயிருக்கே? ம்.. பார். எவ்வளவு சிரமப்பட்டு இங்கே வந்து தந்திருக்கார்...''

தலைமை ஆசிரியர் பேசிக்கொண்டே போக, கண்ணீர் பெருகியது பாலுவுக்கு.

பார்வையற்ற அந்தப் பெரியவரின் பொதுத் தொலைபேசிக் கடையிலிருந்து தான், நேற்று அவன் தன் அம்மாவுக்குப் போன் செய்தான். அதற்காகக் காசு கொடுக்க ஜியோமெட்ரி பாக்ஸை எடுத்தான். அப்போதுதான், தவறான சிந்தனை ஏற்பட்டது அவனுக்கு. 'காசு கொடுக்காமல் போனால், இவருக்கு நம்மை எப்படிஅடையாளம் தெரியும்?' என்று நினைத்தவன், காசு கொடுக்காமல் நழுவி விட்டான். ஜியோமெட்ரி பாக்ஸைக் கடையிலேயே விட்டுவிட்டோம் என்பதும் அப்போது அவனுக்கு நினைவில்லை.



ஜியோமெட்ரி பாக்ஸ்!

தன்னைத் தேடி ஜியோமெட்ரி பாக்ஸைக் கொண்டு வந்து தந்திருக்கிற பெரியவர், தான் ஏமாற்றிய விஷயத்தைப் பற்றி, தலைமையாசிரியரிடம் ஒன்றுமே சொல்லவில்லை என்று புரிந்ததால் மேலும் அவன் மனம் கூசியது. தன்னுடைய தவறை வாய்விட்டுச் சொல்லி அழுதான்.

''ஐயா, இப்ப நீங்க வரலைன்னாலும் சாயந்திரம் உங்களைப் பார்த்து மன்னிப்பு கேட்டிருப்பேன். என்னால குற்ற உணர்ச்சியைத் தாங்க முடியலை. என்னை மன்னிச்சிடுங்க.'' கண்ணீர் வழியப் பேசிய பாலுவை அருகே அழைத்த தலைமையாசிரியர் சொன்னார்:

''பாலு, உன் தவறைப் பத்தி அவர் எதுவுமே சொல்லாத போதும், நீயா முன்வந்து சொன்னே பாரு... அப்பவே உன் தவறுக்கான தண்டனையை நீயே கொடுத்துக்கிட்டே. தானே முன்வந்து தன் தப்பை ஒத்துக்கணும். அதுதான், அடுத்த தப்பு நடக்காம பாத்துக்கும். இனி என்னிக்கும் உன்னால தப்பு செய்ய முடியாது. கிளாஸுக்குப் போ.''

''சார், அவருக்குக் காசு கொடுக்கணும்'' என்று சட்டைப் பையினுள் கைவிட்டான் பாலு.

அதுவரை மௌனமாக அமர்ந்திருந்த பெரியவர் சொன்னார்: ''வேண்டாம் பாலு. இப்ப நீ பேசின உண்மைதான் எனக்கு வேண்டிய காசு. அதை நீ கொடுத்துட்டே. அதுவே எனக்குப் போதும்.''

பாலுவின் கண்களில் இருந்து மீண்டும் கண்ணீர் சுரக்க ஆரம்பித்தது.

- அ.அருண் பாலாஜி,
எட்டாம் வகுப்பு,
சிறிய மலர் மேல்நிலைப் பள்ளி,
கும்பகோணம்.

✱ பிரமிடு என்றதும் நினைவுக்கு வரும் நாடு எகிப்து. அங்கு மொத்தம் 76 பிரமிடுகள் உள்ளன.

✱ இந்தியாவைப் போன்றே குடும்ப அமைப்பு முறை கொண்ட நாடு ஜப்பான். இந்த நாட்டினரின் தேசிய உடை 'கிமோனோ'.

✱ வலமிருந்து இடமாகவும், இடமிருந்து வலமாகவும் படித்தால், ஒரே மாதிரி அமையும் சொற்கள், ஆங் கிலத்தில் பாலிண்ட்ரோம் (Palyndrome) என்று சொல் லப்படும். அப்படி அமையும்





✱ வேப்ப மரம்



✱ ரோமுலஸ் ரிமூஸ் சிற்பம்

இந்திய மொழிப் பெயர் : மலையாளம். ஆங்கிலத்தில் எழுதும்போது Malayalam. தமிழில் : விகடகவி.

✱ முதல் முதலாக ஆங்கில அக ராதியைத் தயாரித்தவர் நோவா வெப்ஸ்டர் (Noah Webster)

✱ செவ்விந்தியரின் தேசிய உடை மொக்காஸின்ஸ் (Moccasins)

✱ ரோம் நகரை உரு வாக்கியவர்கள் ரோமுலஸ், ரிமூஸ் என்ற இரு சகோ தரர்கள்.

✱ நியூயார்க்கில் உள்ள ப்ராட்வே (Broadway) சாலைதான், உலகின் மிக நீண்ட சாலை.

✱ வேதிப் பொருள் களின் அரசன் எனப்படு வது கந்தக அமிலம்.

- பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை



✱ கிமோனோ

✱ கிரேக்க மொழியின் முதல் இரு எழுத்துக்களான ALPHA, BETA என்பதி லிருந்து தோன்றியதே Alphabet என்ற சொல்.

- ஏ.ஸ்ரீபாரதி, உ.எண் 919, கும்பகோணம்

✱ இங்கிலாந்து நாட்டில் செருப்பு வாங்கினாலும் கூட 18 மாதங்கள் உத்தரவாதம் தருகின்றனர்.

✱ மீன் இனங்களில் டூனா மீன்கள், தூங்கும்போது கூட நீந்திக் கொண்டேதான்



சுந்தரவனக் காடுகள்



76 பிரமிடுகள்!



கடல் நத்தை

தூங்கும்.

✱ டால்ஃபின் இன மீன்கள் தூங்கும் போது அதன் கண்கள் திறந்தே இருக்கும்.

✱ யானை ஒரு மைலுக்கும்கூட ஆளை விரட்டும். ஆனால், சாதாரணமாக யானைக்கு அச்சம் அதிகம்.

✱ ஒரு கிலோ அகத்திக் கீரையில் உள்ள சுண்ணாம்புச் சத்தைப் பெற 113 கிலோ ஆப்பிள் பழம் தேவைப்படும்.

✱ தேள் ஒருவரைக் கொட்டிய பிறகு, முப்பது தினங்களுக்குப் பிறகுதான், மற்றவரைக் கொட்டத் தேவையான அளவுக்கு அதற்கு நஞ்சு சுரக்கும்.

✱ பன்றிகள் வளர்ப்பதில் முன்னணியில் உள்ள நாடு சீனா. 1990ம் ஆண்டின் புள்ளி விவரப்படி சீனாவில் 36 கோடி பன்றிகள் உள்ளன.

✱ வீட்டில் காணப்படும் ஈ, ஏழு கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கக் கூடியது.

✱ சுமார் 300 வகையான பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பயிர்களைக் காக்கிறது வேப்பமரம்!


✱ அமெரிக்கக் கடற்கரைகளில் காணப்படும் கடல் நத்தை ஆண்டு தோறும் ஐம்பது கோடி முட்டைகளை இடுகின்றது.

✱ மேற்கு வங்காளத்தில், கங்கை கடலுடன் சேருமிடத்தில், உள்ளவை சுந்தரவனக் காடுகள்.

✱ காளானிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து பென்சிலின் (penicillin).

- பொ. கார்த்திகேயன்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி, கோவை

வழி காட்டுங்கள்!



இந்த எலும்புத் துண்டு
டாமிக்கா? ஜிம்மிக்கா?

சொல்லச் சொல்ல...

ஒலியெழுப்புவது என்பது எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான விஷயம். யாராவது உரத்த குரலில் பேசினால் அல்லது குழந்தைகள் சத்தமிட்டால்கூட, வழக்கத்தில் 'ஏன் கத்தறே?' என்றுதான் நாம் சொல்கிறோம். ஆனால், ஒலியெழுப்புதல் என்பதுகூட, ஒவ்வொரு உயிரினத்துக்கு ஏற்ப மாறுபடும்.

யானைகள் சத்தமிடுவதை 'பிளிறும்' என்று சொல்லவேண்டும். அதைப் போன்றே இன்னும் சிலவற்றை இங்கே பார்க்கலாம்:

நரிகள் ஊளையிடும்; ஆடுகள் கதறும்; குதிரைகள் கனைக்கும்; பன்றிகள் உறுமும்;

சிங்கம் கர்ஜிக்கும்; நாய் குரைக்கும்; கழுதை கத்தும்; எருது எக்காளமிடும்; வானம்பாடி பாடும்; குயில் கூவும்; மயில் அகவும்; கிளி மிழற்றும்; சேவல் கூவும்; காகம் கரையும்; கோழி கொக்கரிக்கும்; பல்லி சொல்லும்; பாம்பு சீறும்.

கத்துவது என்று சொல்லும் விஷயத்தில்கூட, இவ்வளவு நுட்பமாகக் கவனித்துச் சொல்ல, பல வார்த்தைகளைக் கொண்டிருக்கிறது தமிழ். நாம் பேசுகிறோம். பேசுதல் என்ற இந்தச் சொல்லுக்கு, தமிழில் பல்வேறு வார்த்தைகள் உண்டு தெரியுமா? பகர்தல், செப்புதல், விளம்புதல், கூறுதல், நவிலல், சொல்லுதல், உரைத்தல், சாற்றுதல், புகலல்... இந்த வார்த்தைகள் அனைத்துமே பேசுதல் என்று பொருள்படுபவைதான்.

-பி.சர்வேஸ்வரன், உ.எண்: 456, மதுரை









பறக்கும், பல்லைக் காட்டும்..!

I. செல்வந்தர் ஒருவர் தம் பிறந்த நாளன்று ஏழை மக்களுக்கு வழங்க நூறு லிட்டர் பாலுடன் வந்தார். பெரியவர்களுக்கு ஆளுக்கு 3 லி பாலும், இளைஞர்களுக்கு 2 லி பாலும், சிறுவர்களுக்கு 1/2 லி பாலும் வழங்கினார்.

சரியாக 100 பேர் அவரிடம் பால் வாங்கியவுடன் 100 லிட்டர் பாலும் தீர்ந்தது. அப்படியானால் அவரிடம் எத்தனை பெரியவர்கள், இளைஞர்கள், குழந்தைகள் பால் வாங்கி இருப்பார்கள்?

II. 66 x 66 = 1086. இந்தக் கணக்கு தவறானது. ஆனால் எண்களையோ, குறியீடுகளையோ மாற்றாமல் இந்தக் கணக்கைச் சரியாக்கலாம். எப்படி?

III. 3 என்ற எண்ணை 5 முறை மட்டுமே உபயோகித்து 31 வருமாறு செய்ய வேண்டும். எப்படி?

- ந.பிருந்தா, உ. எண் 1098, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

IV. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி, கட்டங்களைப் பூர்த்தி செய்யுங்கள். உங்கள் மொழியறிவு பெருக இந்தப் புதிர் வாய்ப்பு!

1. யானை			

2. சூரியன்					
3. அழுக்கு					
4. குதிரை					
5. அரசன்					
6. உலகம்					
7. சந்தனம்					

- என். நர்மதா,
உ. எண் 635, புதுச்சேரி

V. ஓரெழுத்துப் புதிர் இது!

1. பறக்கும்; பல்லைக் காட்டும் - இது என்ன?
2. வலியைச் சொல்லும்; அலறலைக் காட்டும் - இது என்ன?
3. ஆச்சர்யப்படும்; தெரியும் என்னும் - இது என்ன?
4. கேவலப்படுத்தும்; உமிழ்தலைச் சொல்லும் - இது என்ன?
5. கேட்கும்; இரத்தலைக் குறிக்கும் - இது என்ன?

- என். வந்தனா, ஒன்பதாம் வகுப்பு, திருச்சி

VI. பொருத்துக

பின்வரும் சொற்களைப் பொருத்துக:

1. மலர் - அ) உலோகம்
2. நிலம் - ஆ) பயணம்
3. எண்ணெய் - இ) வழிபாடு
4. ரயில் - ஈ) கப்பல்
5. கோவில் - உ) மணம்
6. இரும்பு - ஊ) பயிர்
7. கடல் - எ) தீபம்

- எஸ்.சுப்ரியா, உ. எண் 79, சென்னை

விடைகள் :

I. பெரியவர்கள் 5, இளைஞர்கள் 25, சிறுவர்கள் 70

100 பேர்

5 x 3 லிட் = 15 லி

25 x 2 லிட் = 50 லி

70 x ½ லிட் = 35

100 லி

II. கணக்கை அப்படியே தலைகீழாக்கினால் சரியான கணக்கு வரும். அதாவது

99 x 99 = 9801.


III. $3^3 + 3 + 3/3 = 31$

IV. 1.வேழம், 2.பகலவன், 3.கசடு, 4. புரவி, 5.கொற்றவன், 6. ஞாலம், 7.களபம்

V. 1.ஈ, 2.ஆ, 3.ஓ, 4.தூ, 5.தா

VI. 1.உ, 2.ஊ, 3.எ, 4.ஆ, 5.இ, 6.அ, 7.ஈ





சில பூச்சிகளின் தலையில் மெல்லிய கொம்புகள் போன்ற அமைப்பு காணப்படும். இவை எதற்குப் பயன் படுகின்றன?

ஆங்கிலத்தில் இக்கொம்புகளை 'ஆன்டெனா' என்று அழைப்பதுண்டு. இவை வாசனையை நுகர்வதற்காக அமைந்தவை. இருப்பினும், அவற்றின் மூலம் தொடுமொழியில் பூச்சிகள் பல செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றன. இரண்டு தேனீக்களோ, அல்லது இரண்டு எறும்புகளோ தமது முன் கொம்புகளால் நீண்ட நேரம் தொட்டுக்கொண்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அந்தச் சமயத்தில் அவை தங்களுக்குள் தகவல்களைக் கொடுத்து வாங்கிக் கொள்கின்றன என்று பொருள். சில பூச்சிகள் இவற்றின் உதவியால் தங்கள் சுற்றுப்புற ஒலிகளைக் கேட்டறியவும் செய்கின்றன. அதாவது, அவை காதுகளாகவும் செயல் படுகின்றன.


- சு. அபிஷேக்,
உ.எண். 518, சென்னை

'மேக்னட்' வந்தது எப்படி?

காந்தத்தை ஆங்கிலத்தில் மேக்னட் (magnet) என்று அழைப்பது ஏன்?

பண்டைய கிரேக்க நாட்டில் 'மேக்னெஸ்' என்ற ஆட்டு இடையன் இருந்தான். ஒரு நாள் அவன் ஆடுகளை ஓட்டிச் சென்றுக்கொண்டிருந்தான். அப்போது அவன் கையிலிருந்த இரும்பு முனை கொண்ட தொரட்டி, அங்கிருந்த பாறையில் பட்டது. உடனே, அது பாறையில் ஒட்டிக் கொண்டது.

எவ்வளவு பிடித்து இழுத்தும் வரவில்லை. பல முறை முயற்சித்த பின்னரே, அவனால் தொரட்டியை எடுக்க முடிந்தது. அப் பாறையில் இரும்புப் படிவம் இருந்ததைக் கண்டான் மேக்னஸ். இரும்





...பைத் தன்பால் ஈர்த்துக் கொள்ளும் தன்மை, அந்தப் பொருளுக்கு இருப்பதை மேக்னஸ் முதன் முதலில் கண்டுபிடித்ததால், அதற்கு 'மேக்னட்' எனப் பெயர் வந்தது.

– எஸ். சரஸ்வதி,
பெரிய காஞ்சீபுரம்

வயிறு நிறைய சாப்பிட்டதும் தூக்கம் வருவதுபோல உள்ளதே, ஏன்?

உடலிள்ள பல்வேறு உறுப்புகளுக்குத் தேவையான சத்துப் பொருள்களையும் பிராணவாயுவையும் ரத்தம்தான் எடுத்துச் செல்கிறது. அதாவது, எந்தப் பகுதிக்கு அதிக சக்தி தேவையோ, அந்தப் பகுதிக்கு அதிகமான ரத்தம் செல்லும். நாம் உண்ட உணவு நன்கு செரிக்க வேண்டும் என்றால், நம் செரிமான உறுப்புகளுக்குக் கூடுதலாகச் சக்தி தேவைப்படுகிறது. இதனால் இந்த உறுப்புகளுக்கு அதிக அளவு ரத்தம் வந்து சேருகிறது.

செரிமானப் பாதைக்கு அதிகமான ரத்தம் வந்துவிடுவதால், மூளை மற்றும் பிற முக்கிய உறுப்புகளுக்கு ரத்தம் செல்வது சற்றுக் குறைகிறது. இதன் விளைவாக மூளை சோர்வடைகிறது; அதனால், தூக்கம் வருவதுபோல் உள்ளது.



– க.ஆர்த்தி, உ.எண்.40,
பதினொராம் வகுப்பு,
ஸ்ரீ ரமண வித்யாலயா,
இராஜபாளையம்


வண்ணம் தீட்டுங்கள்!



இங்குள்ள படத்துக்கு
வண்ணம் தீட்டி மகிழுங்கள்

நரி வைத்தியம்!

கதை : ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1245, கோபி
படம் : பிள்ளை





"உயிரெடுத்தீங்க..!"

தமிழ்ப் பாடவேளை. என் வகுப்புத் தோழன் ஒருவன் மிகவும் குறும்புக்காரன். தமிழ்ப்பாடம் என்று எழுதுவதற்குப் பதிலாக, 'தமிழ்ப்படம்' என்று போர்டில் எழுதிவிட்டான்! வகுப்புக்குள் நுழைந்த ஆசிரியை அதைக் கவனித்தார். அவன் தான் செய்திருப்பான் என்று புரிந்து ''என்னடா, எழுதும்போது காலை விட்டுட்டே. உன் காலை அங்க சேர்த்திடலாமா?'' என்று கேலியாகக் கேட்டார். அசடு வழிய எழுந்த அவன், உடனே போய் வேகவேகமாக தமிழ்ப் பாடம் என்று திருத்தினான். அதன்பின், பாடம் எடுக்க ஆரம்பித்த ஆசிரியை, ''நேற்று இலக்கண வகுப்பில் என்ன பாடம் நடத்தினேன்?'' என்று கேட்டார். உடனே அவன் மீண்டும் ''உயிரெடுத்தீங்க மிஸ்!'' என்றான் படக்கென்று. ஆசிரியை உட்பட அனைவரும் சிரித்து விட்டோம். உயிரெழுத்து என்பதைத் தான் 'உயிர்' என்று அவன் சொன்னான் என்றாலும், சொன்ன வேகம் சிரிப்பை பரவச் செய்தது நிஜம்.

- அதிபன் அன்புமணி,
உ. எண் 120

எமன் மாமா!

எங்கள் உறவினர்களுள், ஒருவர் பெயர் எம்.நாராயணன். வயதில் பெரியவரான அவரை மரியாதை நிமித்தமாக 'எம்.என்.' என்று என் வீட்டிலுள்ள பெரியவர்கள் அழைத்தனர்.



குழந்தைகள் எம்.என். மாமா என்றனர்.

ஒரு முறை அவர் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது என் தம்பி, 'எமன் மாமா வந்துவிட்டார்' என்று அவர் வருகையை அறிவித்தான். அதைக் கேட்டு அதிர்ச்சியான அந்தப் பெரியவர் ''ஆபத்பாந்தவன் அநாத ரக்ஷகன்' என்றெல்லாம் அர்த்தம் தருகின்ற என் பெயரை, நீ எமன் பெயராக மாற்றிவிட்டாயடா படவா'' என்று கூறிச் சிரிக்க,. வீட்டில் உள்ள அனைவரையும் அந்தச் சிரிப்பு தொற்றிக்கொண்டது.

புத்தகத்தின் மதிப்பு

ஒரு முறை, புத்தகக் கண்காட்சிக்கு எங்கள் பள்ளி மாணவிகளை அழைத்துச் சென்றனர். அங்கு பலரும் புத்தகங்களை வாங்கினர். மறு நாள் வகுப்பறை. சமூக அறிவியல் ஆசிரியை முதல் பாட வேளைக்கு வந்தார். அவரிடம் கண் காட்சியில் வாங்கிய புத்தகங்களைக் காண்பித்தனர் சில மாணவிகள். ஒரு மாணவி வரலாற்றில் இடம் பெற்றவர்கள் பற்றிய புத்தகம் வாங்கியதாகக் கூறினார். அதைக் கேட்ட ஆசிரியை அவளைப் பாராட்டினார். அடுத்த மாணவி 'பாரதியார் கவிதைகள்' புத்தகத்தை வாங்கியதைக் கூறினாள். அவளையும் பாராட்டினார். மூன்றாவது மாணவி ''மிஸ் நான் 200 ரூபாய்க்குப் புத்தகம் வாங்கினேன்'' என்





றாள். அதைக் கேட்ட ஆசிரியை, ''புத்தகத்தின் மதிப்பு அதில் உள்ள செய்திகளும் பொருளும் மட்டும்தான். விலை அல்ல. புத்தகம் வாங்கும் முன்பு இதைப் புரிந்து கொள்ள வேண்டும்'' என்றார். அந்த மாணவிக்கு மட்டுமல்ல; எங்களுக்கும் அந்தப் புதிய பாடம் புரிந்தது.

- ஜி.லக்ஷ்மி,
பன்னிரண்டாம் வகுப்பு,
உ. எண் 1429, காஞ்சிபுரம்

குட்டீஸ் கைவண்ணம்!



கே.ஜெ.ஷிஃபானா அஃப்ஸின்,
நான்காம் வகுப்பு, ஆக்ஸ்ஃபோர்டு மெட்ரிக்
மே.நி. பள்ளி, கூத்தாநல்லூர்



ஸ்ரீ. சுப்ரஜா,
உ. எண் 876, நான்காம் வகுப்பு,
ஆரூர் வித்யா மந்திர், திருவாரூர்




வி.அனன்யா,
நான்காம் வகுப்பு,
சின்மயா வித்யாலயா,
சென்னை




ஏ.டி. ஆதித் பிரணவ்,
உ. எண் 1388, இரண்டாம் வகுப்பு,
டி.ஏ.வி. பெல் பள்ளி, ராணிப்பேட்டை

பயிற்சி



வரைந்து பாருங்கள்!

வழங்குபவர் : எஸ். வஜ்ரவேலு




அடையாளம்

பாரிஸில் உள்ள ஈஃபில் கோபுரத்தைப் போன்றே தோற்றமளிக்கும் இந்தக் கோபுரம், ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவில், ஷிபா பார்க் (Shiba park) என்னும் இடத்தில் உள்ளது.

உலகின் புகழ் பெற்ற சியர்ஸ் டவருக்கு அடுத்தபடியாகச் சிறந்து விளங்குவது இந்த டோக்கியோ டவர்.

★ ஜப்பானில் அடிக்கடி நிகழும் நிலநடுக்கத்தால் பாதிப்பு ஏற்படாத வகையில் இது கட்டப்பட்டு உள்ளது.

★ டோக்கியோ நகரிலுள்ள எட்டு தொலைக்காட்சி நிலையங்களும் இந்தக்



வீசும் ராட்சதக் காற்றை எதிர் கொள்ளக்கூடிய வகையில், இந்தக் கோபுரத்தின் தோற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

நான்கு தளங்களைக் கொண்ட இந்தக் கோபுரத்தின் முதல் தளத்தில், மீன் காட்சியகம் அமைந்துள்ளது. இதில் எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட அபூர்வ வகை மீன்கள் வளர்க்கப்படுகின்றன.

இரண்டாவது தளத்தில், உணவுக் கூடமும், பல்வேறு அங்காடிகளும் அமைந்துள்ளன.

மூன்றாவது தளத்தில், கின்னஸ் உலகச் சாதனைகளைச் செய்தவர்கள் பற்றிய அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

நான்காவது தளத்தில் ஓவியக்

28,000 லிட்டர் பெயிண்ட்!

★ நகரப் போக்குவரத்தைக் கண்காணிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும், இந்தக் கோபுரத்தின் உச்சியில் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மணிக்கு 320 கி.மீ. வேகத்தில்

இந்தக் கோபுரத்தைக் கட்ட, 1958-ஆம் ஆண்டில் 8.4 மில்லியன் டாலர் செலவானது.

ஒருமுறை இதற்கு வண்ணமடிக்க 28,000 லிட்டர் பெயிண்ட் தேவைப்படுகிறது என்பது உபரிச் செய்தி!

பி.தமிழ்செல்வன்,
பன்னிரண்டாம் வகுப்பு,
பச்சையப்பன் மேனிலைப் பள்ளி,
பெரிய காஞ்சிபுரம்

ஆல்ப்ஸின் காவலன்!

சிறு கரடிக் குட்டி போலத் தோற்ற மளிக்கும் மர்மோத் (Marmot) பாலூட்டி இனத்தைச் சேர்ந்தது. இவற்றில் 'விசில் மர்மோத்' தனிச்சிறப்புடையது.

ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் காணப் படும் இவை கூட்டமாக வாழ்பவை; சுறுசுறுப்பானவை. குளிர்காலம் முழு வதும் தங்கள் பதுங்கு குழிகளில் இவை தூங்கிக் கொண்டிருக்கும். ஆபத்து ஏதும் வருவதாக உணர்ந்தால், எச்சரிக்கை விசில் அடிக்கும் இயல்புடையவை. அதனால்,. 'ஆல்ப்ஸின் காவல் படை' என்ற செல்லப் பெயரும் இவற்றுக்கு உண்டு.

- எஸ்.தணிகைவேல், காஞ்சிபுரம்

தேடி வரும் இரை!

கடலின் ஆழமான பகுதிகளில் அபூர்வமான சில மீன்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று லாந்தன் மீன் (lantern fish). இதை ஆங்க்லர் மீன் (angler fish) என்றும் சொல்வார்கள்.

இந்த மீனின் வாயிலிருந்து ஒரு வகையான ஒளி வெளிப்படுகிறது. அந்த வெளிச்சத்தை நாடி வரும் குட்டி மீன்கள் உள்ளிட்டவற்றை, தன் இரையாக்கிக் கொள்கிறது லாந்தன் மீன். இரை தேடி அலையாமல், இரையையே தேடி வரச் செய்யும் சாமர்த்தியமான மீன் இது! (வீடுகளில்தான், விளக்கை தேடும் விட்டில் பூச்சிகள் என்றால், கடலடியிலும் இப்படி ஒன்று!)

பாடிக் கொண்டே....

கோடையின் வெப்பத்தைத் தாங்க முடியாமல், எல்லாப் பறவைகளுமே ஒலியெழுப்பும். என்றாலும், சில மணி நேரத்தில் களைத்துப் போய் அவை அமைதியாகிவிடும்.

ஆனால், வென்ட்ரிலோகுயிஸ்ட் (ventriloquist) அப்படியல்ல, கொஞ்சம் கூட ஓய்வே இல்லாமல், ஒலியெழுப்பிக் கொண்டே இருப்பது இதன் பாணி. ஃபிங்கர் பறவை (finger bird), பிளாக் ஸ்மித் (black smith), காப்பர் ஸ்மித் (copper smith) என்று வேறு பெயர்களாலும் இது குறிப்பிடப்படுகிறது.

- ம.விவேக், குட்டம்

சண்டைக்கார மீன்

தன் பிம்பத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொத்தும் குருவி பற்றி நாம் கேட்டதுண்டு. ஆனால், 'சயமீஸ்' (siamese) என்கிற மீனுக்கும் இத்தகைய குணம் உண்டு. பொதுவாக ஐந்து செ.மீ. நீளமுடையதாக இந்த மீன் காணப்படும். சில, ஐந்து இன்ச் நீளத்திலும் காணப்படும். Betta Sptendens என்று சொல்லப்படும் இந்த மீனை, சண்டையிடும் மீன் (fighting fish) என்றும் குறிப்பிடுகிறார்கள்.

- ஃபாத்திமா, கீழக்கரை

வேட்டைக்காரன்

மீன்களை வேட்டையாடுவதில் ஆஸ்ப்ரே (osprey) தனிரகம். அலகைப் பயன்படுத்தாமல், தன் காலில் உள்ள நான்கு விரல்களையும் பயன் படுத்தி, மீன்களை 'லபக்'கிவிடும் சாதுர்யம் இதற்கு உண்டு. கீழ் நோக்கி வளைந்துள்ள இதன் கூர்மையான கால் விரல்களில் இருந்து எதுவும் தப்ப முடியாது. கீழிறங்கும் போது கால்களை முன்னே நீட்டி, மீனைப் பற்றியவுடன் உடலைச் சிலிர்த்து மேலெழுந்து பறப்பது, இதன் தனித்தன்மை.

- எஸ்.சரஸ்வதி,
பெரிய காஞ்சிபுரம்

* சயமீஸ்



* லாந்தன்



* மர்மோத்





* ஆஸ்ப்ரே



* வெண்ட்ரிலோகுபிளட்

அறிவியல் கதை

பொம்மைக் கல்யாணம்!

சோஃபியா (Sofia) புத்திசாலிப் பெண்.

அதைவிட உசத்தியாக ஏதாவது பாராட்டு வார்த்தை இருந்தால், அதற்கும் தகுதியானவள்.

இத்தனைக்கும், சோஃபியா பள்ளிக்குச் சென்று படிக்கவில்லை. கொஞ்சநாள் ஆசிரியர்கள் அவள் வீட்டுக்கே வந்து பாடம் சொல்லிக்கொடுத்தார்கள். பிறகு, அதுவும் நின்றுவிட்டது.

ஆனால், சோஃபியா படிப்பதை மட்டும் நிறுத்தவே இல்லை. எங்கேயாவது ஒரு புத்தகம் சிக்கிவிடும். அட்டைடு அட்டை ஒரு வார்த்தைகூட விட்டுவைக்காமல் அக்கறையாகப் படிப்பாள். சிக்கலான விஷயங்களை அவளே யோசித்துப் புரிந்துகொள்வாள்.

அவளது பக்கத்து வீட்டில் 'டைர்டாவ்' என்கிற பேராசிரியர் இருந்தார். அவர் எழுதிய இயற்பியல் புத்தகம் ஒன்று சோஃபியாவுக்குப் பரிசாகக் கிடைத்தது.

வழக்கம்போல், சோஃபியா அந்தப் புத்தகத்தை ஆர்வத்தோடு படிக்கத் தொடங்கினாள்.

அதில் விளக்கப்பட்டிருந்த கடினமான கோட்பாடுகள், சூத்திரங்கள், ஆகியவற்றை வாசித்துப் புரிந்துகொண்டாள்.

அந்த வாரக் கடைசியில், பேராசிரியர் டைர்டாவ் அவர்களுடைய வீட்டுக்கு வந்திருந்தார்.

''சோஃபியா, அவரிடம் அதேமாதிரி வேற ஏதாவது நல்ல புத்தகம் இருந்தாக் கொடுங்களேன், ப்ளீஸ்!'' என்றாள்.


பேராசிரியர் டைர்டாவ் அவளை நம்பமுடியாமல் பார்த்தார்.

''நிஜமாவே நீ அந்தப் புத்தகத்தைப் படிச்சுட்டியா?''

''ஆமா, ப்ரொஃபஸர், ஏன் அப்படிச் சந்தேகமாக் கேட்கறீங்க?''

''ஒண்ணுமில்லைம்மா, உன்னை மாதிரி சின்னப் பொண்ணுங்களுக்கெல்லாம் அந்தப் புத்தகம் புரியாதுன்னு நான் நினைச்சேன்.''

''எனக்கு எல்லாம் நல்லாப் புரிஞ்சது'' என்ற சோஃபியா, ''பாருங்க, புக் முழுக்க எனக்குப் பிடிச்ச வரிகளைக் குறிச்சு வெச்சிருக்கேன்.''



அவள் காட்டிய புத்தகத்தை மெல்லப் புரட்டினார் டைர்டாவ். ஒவ்வொரு பக்கத்திலும் ஓரத்தில் எழுதப்பட்டிருந்த சிறிய குறிப்புகள் அவரைப் பிரமிப்பில் ஆழ்த்தின.


உடனடியாக, சோஃபியாவின் தந்தையைச் சந்தித்தார்.

''உங்க பொண்ணு ரொம்பப் பெரிய

என்.சொக்கன்

மேதையா இருக்கா. அவளை நல்லாப் படிக்கவைங்க. ரொம்பப் பிரமாதமா வருவா. அவளால உங்களுக்கும் பெருமை, நம்ம நாட்டுக்கும் பெருமை!'' என்று மனம் திறந்து பாராட்டினார்.

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம்!'' -அலட்சியமாக பதில் வந்தது அவள்



தந்தையிடமிருந்து. ''பொண்ணுங்க படிச்சு என்ன பெரிசாச் சாதிச்சுடப் போறாங்க!''

அந்தக் காலத்தில், உலகம்முழுவதுமே பெண்களுக்குப் படிப்புச் சொல்லித்தருவதில் யாரும் ஆர்வம் காட்டவில்லை. சோஃபியாவோ நிறையப் படிக்க விரும்பினாள், அறிவியலில், கணிதத்தில், மற்ற துறைகளில் இன்னும் ஏராளமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும், ஆராய்ச்சிகள் செய்யவேண்டும், புது விஷயங்களைக் கண்டுபிடிக்கவேண்டும் என்கிற துடிப்பு.

அவளுடைய தந்தைக்கு இதெல்லாம் புரியவில்லை, ''நீ எவ்ளோதான் கெஞ்

சினாலும் நான் உன்னைப் படிக்க வைக்க மாட்டேன், ஒழுங்கா வீட்ல கெட'' என்று அதட்டி உட்காரவைத்து விட்டார்.

சோஃபியா யோசித்தாள். உள்ளூரில் தான் பெண்களுக்குப் படிக்க வாய்ப்புகள் இல்லை. எங்கேயாவது வெளிநாட்டுக்குப் போய்ப் படிக்கலாமா? அதிலும் ஒரு பிரச்னை.

அன்றைய சட்டங்களின்படி, ரஷ்யாவில் பிறந்த பெண்கள், தனியாக வெளிநாடு போகமுடியாது. அவர்களுடைய தந்தை அல்லது கணவரின் அனுமதி வேண்டும்.

சோஃபியாவின் தந்தை அவளுக்கு அனுமதி தர மறுத்துவிட்டார். அவளுக்குக் கல்யாணம் ஆகவில்லை என்பதால், கணவரிடமும் அனுமதி வாங்கமுடியாது; என்ன செய்யலாம்?



✽ சோஃபியா

யோசித்த சோஃபியா, ஒரு முடிவுக்கு வந்தாள், ''சட்டத்துக்காக, ஒரு பொய்க் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியதுதான்!''

அவளுடைய சிநேகிதிகள் அதிர்ந்தார்கள், ''என்னடீ சொல்றே? பொய்க் கல்யாணமா? இதனால உன் எதிர்காலம் என்ன ஆகும்ன்னு யோசிச்சியா?''

''நான் நல்லாப் படிச்சாத்தான் எனக்கு எதிர்காலம்,'' என உறுதியான குரலில் சொன்னாள்.

ஆனால், சோஃபியாவுக்காக அவளைப் பொம்மைக் கல்யாணம் செய்துகொள்ள யார் முன்வருவார்கள்?

ஒருவர் வந்தார். அவர் பெயர் விளாடிமிர் கோவலெவ்ஸ்கியா (Viladimir Kovalevskaya) அவ்வளவுதான். சோஃபியா மகிழ்ச்சிக் கடலில் மிதந்தாள். கல்யாண மகிழ்ச்சி அல்ல, இதன்மூலம் அவளுக்குத் தொடர்ந்து படிப்பதற்கான ''லைஸென்ஸ்'' கிடைக்கப்போகிறதே, அந்தச் சந்தோஷம்!

உடனடியாக, அவர்களுடைய திருமணம் நடைபெற்றது. சோஃபியா தனது ''கணவர்'' அனுமதியோடு முறைப்படி ரஷ்யாவிலிருந்து வெளியேறினார். ஜெர்மனியில் தன்னுடைய படிப்பைத் தொடர்ந்தார்.

இந்தத் திடீர் திருமணத்தால் சோஃபியா ஏகப்பட்ட அவஸ்தைகள், மன அழுத்தங்களைச் சந்திக்கவேண்டியிருந்தது. அப்போதெல்லாம், அவருக்கு ஆறுதல் அளித்தவை, புத்தகங்கள், படிப்பு, அறிவியல், கணிதம். ஒவ்வொரு நாளும் புதுசுபுதுசாகக் கற்றுக் கொள்கிறோம், கண்டுபிடிக்கிறோம் என்கிற மகிழ்ச்சி!

கணக்குப் பாடத்தில் நாம் பயன்படுத்தும் differential equations மற்றும் எந்திரவியலில் சோஃபியாவின் ஆராய்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை. வடக்கு ஐரோப்பாவில் முழுநேரப் பேராசிரியரான முதல் பெண்ணும் சோஃபியாதான்.

இன்று நாடு கடந்து போய் படிப்பதும், வேலை பார்ப்பதும் வெகு சாதாரணம். ஆனால், நூறு வருடங்களுக்கு முன்பே அதைச் செய்த சோஃபியா, இன்றைய பெண்களுக்கெல்லாம் முன்னோடி இல்லையா? ●

கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது அட்டையில்!

1676. பி.தமிழ்ச்செல்வன், பன்னிரண்டாம் வகுப்பு, பச்சையப்பன் ஆண்கள் மே.நி. பள்ளி, காஞ்சிபுரம்
1677. ஆதர்சனா, மூன்றாம் வகுப்பு, சர்ச் பார்க் கான்வென்ட், சென்னை
1678. பி.என்.சௌரவ், ஆறாம் வகுப்பு, ஏ.பி.எஸ்.பப்ளிக் பள்ளி, பெங்களூரு
1679. ஜி.ப்ரியா, முதல் வகுப்பு, ஹோலி இன்ஃபேன்ட் மே.நி. பள்ளி, சென்னை
1680. சொ.ர.கிருத்திகா, ஏழாம் வகுப்பு, ஜேக்கப் மெட்ரிக் பள்ளி, திருவள்ளூர்
1681. நா.நவ்யஸ்ரீ, விவேகா வித்யாலயா பள்ளி, அம்பத்தூர்
1682. ஆர். சஹானா, ஒன்பதாம் வகுப்பு, செயின்ட் பால்ஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை
1683. சு.ஜெய்சூர்யா, இரண்டாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், ஓசூர்
1684. இரா. ஜெயவிக்னேஷ், நான்காம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், ஓசூர்
1685. இரா. நந்தினி, ஐந்தாம் வகுப்பு, வே.வ.ந.கி.மு. ஆங்கிலப் பள்ளி, வேலூர்
1686. ஸ்வேதா பரத்வாஜ், ஐந்தாம் வகுப்பு, செயின்ட் ஜான்ஸ் மே.நி. பள்ளி, சென்னை
1687. பி.சிவரஞ்சனி, மூன்றாம் வகுப்பு, ஆல் ஏஞ்சல்ஸ் மெ.மே.நி. பள்ளி, சென்னை
1688. கே.விக்ரம், குழந்தை ஏசு மழலையர் மற்றும் ஆரம்பப் பள்ளி, சென்னை
1689. பி.ஸ்ரீதேவி, ஆறாம் வகுப்பு, கே.எம்.கே.உ.நி. பள்ளி, காரைக்கால்
1690. ஹ.சண்முகம், பதினொராம் வகுப்பு, ஸ்ரீ அரவிந்தர் பாலர் மெட்ரிக் மே. நி. பள்ளி, உத்தம பாளையம்
1691. ஏ.ரித்திகா, சிசு வித்யா லயா, காரைக்குடி
1692. சங்கரநாராயணன், ஆறாம் வகுப்பு, மெப்கோ ஸ்லவங் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, திரு மங்கலம்



கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1693. எம்.மாளவிகா, ஆறாம் வகுப்பு, வேதவல்லி வித்யாலயா, வாலாஜாபேட்டை
1694. பி.சிவதினேஷ், ஏழாம் வகுப்பு, ஆல் ஏஞ்சல்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1695. பால லோகசதீஷ், இரண்டாம் வகுப்பு, ஸ்ரீவித்யாலயா, கோபி
1696. எம்.பிரவின்குமார், ஒன்பதாம் வகுப்பு, அரசு ஆண்கள் மே.நி. பள்ளி, நம்பியூர்
1697. இரா. கவிதா, எட்டாம் வகுப்பு, தூய இருதய மகளிர் மே.நி. பள்ளி, தஞ்சாவூர்
1698. இரா. கார்த்திகேயன், ஐந்தாம் வகுப்பு, மேக்ஸ்வெல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்
1699. வீ.மஞ்சுபார்கவி, எட்டாம் வகுப்பு, பெ.கா.நி.அ.மே.நி.பள்ளி, மேட்டூர்
1700. கே.ஜெயகலைவாணி, ஒன்பதாம் வகுப்பு, மரிய நிவாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

பெயரைச் சொல்; பரிசை வெல் - 4







1.________________ 2.________________ 3.________________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....

வீட்டு முகவரி : ....

....பின்கோடு..................

போட்டி பரிசு ரூ.1000/-

கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனித்துப் பாருங்கள். இவை தொடர்பான செய்திகளும், இவற்றுக்கான வேறு படங்களும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம், இங்கே தரப்பட்டுள்ள படங்களின் பெயர் என்ன என்று கண்டுபிடித்து, கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்திரித்து அனுப்புங்கள். சரியான விடைகள் எழுதுவோரில், பத்து பேருக்குக் குலுக்கல் முறையில் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும்.


ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 30.7.2010

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை-32



● நிலவைப் பற்றிய பல அரிய விஷயங்களை வானியல் பகுதி மூலம் தெரிந்து கொண்டோம். - **ஆர்.பிருந்தா, மதுரை** ● எத்தனை காலத்துக்குத்தான் பானையின் அடியில் உள்ள தண்ணீரைக் கல்லெடுத்துப் போட்டுக் காக்கா குடிக்கும். 'ஸ்டிரா காலம் ஆச்சே' என்று வந்த 'மாத்தி யோசி' படத்தொடர் சூப்பர் - **ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை** ● கதம்பம் பகுதியில் இடம் பெற்ற அனைத்துச் செய்திகளும் அருமையாக இருந்தன. - **சி.குணசேகரன் உ. எண் 1340, தஞ்சை** ● கோகுலம் ஒரு பாடப்புத்தகமாக உதவி வருகிறது. சிந்தனைக்கேற்ற சிறுகதைகள், பொது அறிவை வளர்த்துக் கொள்ளத் துணுக்குச் செய்திகள், வயிறு குலுங்க சிரிக்கவைக்கும் நகைச்சுவைகள், மூளைக்கு வேலை தரும் புதிர்கள், விடுகதைகள் மற்றும் விஞ்ஞானத் தகவல்கள் யாவும் பயனுள்ளதாக இருக்கின்றன. படிப்பது மட்டுமின்றி மாதந்தோறும் சேகரித்தும் வருகிறேன். - **நெல்லை த.ஞானச்செல்வன், பிரியம்மாள்புரம்.** ● கோடை விடுமுறையை, அந்தக் காலத்தில் அரசர்கள் அளித்த கொடையுடன் ஒப்பிட்டு விடுமுறை என்பது முன்பைவிட இன்னும் ஆர்வமாக உழைப்பதற்கே என்று அருமையாகச் சொல்லியிருந்த தலையங்கம் சபாஷ் போட வைத்தது. - **ம.அக்ஷயா, உ. எண் 1346, அரூர்.** ● படக்கதை சிம்பிள் என்றாலும், படித்தபோது அதன் மையக் கருத்து, பணிய வைத்த. 'டெம்பிள்' 'கல்லெழுத்து' படத்தொடர்கூட பொறிக்கப்பட வேண்டியதுதான். - **த.சந்தனக்குமார், வி.எம்.சத்திரம்** ● தலையங்கம் இன்றைய மாணவச் செல்வங்களுக்கு வரப்பிரசாதம். - **எம்.சிவரஞ்சனி, உ. எண் 179, திருவாரூர்** ● 'டாக்டர் பக்கம்' பகுதியில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு என்ன வகையான உணவு கொடுத்தால் குழந்தைகள் ஆரோக்கியமாக இருப்பர் என்று ரகம் வாரியாகப் பிரித்துக் கொடுத்ததற்குப் பாராட்டுக்கள். - **எம்.மிருணாளினி, உ. எண் 1567, மதுரை** ● 'தம்பட்டம்' பேர்வழிகளின் ஜம்பம் பலிக்காது என்பதை 'நூறு வழி' படத்தொடர் பக்காவாக உணர்த்தியது. - **எல்.ஹரிபால சுப்ரமணியம், திருக்களூர்** ● கடல் என்ற ஒரு வார்த்தைக்கு இவ்வளவு பெயர்களா என்று படித்து, வியந்து போனேன். - **எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை** ● 'புதிர்கள்' பகுதியில் வெளியானவை அனைத்தும் அறிவை வளர்க்கும் விதத்தில் அமைந்திருந்தன. - **பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை** ● ஆடல், பாடல், கூடல் எனக் கோடைதனைப் பயன்படுத்தி எய்திய உற்சாகத் துள்ளலுடன், புதிய வகுப்பில் கால் பதிக்கும் சிறார்கட்குக் கோடையின் நன்கொடைச் சிறப்பைப் புலப்படுத்தியுள்ள கோகுலவுக்கு நன்றி! - **ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி** ● பெங்குவின்களைப் பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. 'அன்டார்க்டிக் அழகன்' கட்டுரை மூலமாக. - **ஆர்.அம்பிகா, மதுரை**



உங்கள் கவனத்துக்கு!

● சிறுவர் சங்க உறுப்பினராவதற்குக் குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● பட்டியல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை (பக்கம் 66) நிரப்பி, கைப்படத்தை இணைத்து அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

● **சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்பும்போது, அதில் புகைப்படத்தை ஒட்டி னுப்புங்கள்.** புகைப்படம் இல்லாமல், அனுப்பப்படும் கூப்பன்கள் பரிசீலிக்கப்பட ாட்டாது.

● உறுப்பினர் சங்கத்தில் உங்கள் புகைப்படம் இடம் பற்றுவிட்டது என்றால், அந்தப் புகைப்படத்தின் கீழ் றிப்பிடப்பட்ட எண்தான் உங்களுடைய உறுப்பினர் எண். னவே, உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், அந்த ண்ணைக் குறிப்பிட்டுத் தங்கள் படைப்புகளை னுப்பலாம்!

● முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை யிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடை ாது.

● நீங்கள் உறுப்பினர் எனில், டைப்புகளை அனுப்பும்போது ங்களுக்கான உறுப்பினர் எண் ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.

● **ஏற்கெனவே உறுப்பினர் ங்கத்தில் இடம் பெற்றவர்கள் ண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை னுப்ப வேண்டாம்.**

● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் டைப்புகளை எழுதி அனுப்பலாம். சில றிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் ட்டுமே கலந்து கொள்ள முடியும்.



● **மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், றுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.**

● **பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் ங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.**

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் டைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32



கோடியக்கரை காட்டில்...

வானின் அருளே வா! வா!

மழையே மழையே வா வா!
மண்டலம் செழிக்க வாவா!
மானுடம் சிறக்க வாவா!
மன்பதை போற்றிட வாவா!

நாடும் வளம்பெற வாவா!
நாற்றிசை குளிர்ந்திட வாவா!
நெஞ்சமும் வாழ்த்திட வாவா!
நன்மைகள் செய்திட வாவா!

புல்லும் பயனுற வாவா
புதுநிலம் கொழித்திட வாவா!
பசுமை செழித்திட வாவா!
பசித்தவர் சிரித்திட வாவா!

கடவுளின் கொடையே வாவா!
கானகம் வளர்த்திட வாவா!
காட்சிக் கவிதையே வாவா!
கண்டவர் களித்திட வாவா!

வானின் அருளே வாவா
வாரிதிக் கொடையே வாவா
வையம் எங்கும் வளமோங்க
வாவா மழையே வாவா!

- சி.யூ.இனியவன்

கவிதைப் பூங்கா

சுட்டிக் குரங்கு கிளையில் தொங்கி
ஊஞ்சல் ஆடுது!
றுக்கே வந்த காட்டுப் பன்றி
துங்கிப் போகுது!

வெட்ட வெளியில் மேய்ந்த மானும்
ட்டாய்ப் பறக்குது!
வெள்ளைக் குதிரை விரைந்து ஓடி
ாட்டில் மறையுது!

தேடிப் போனால் கோணல் மூக்கு
நாரை ஓடுது!
திரும்பிப் பார்த்தால் 'ஆலா' பறந்து
லா... லா...' பாடுது!

துள்ளித் துள்ளி குழிமுயல்கள்
மிரண்டு ஓடுது
வெள்ளிபோன்ற ஆற்றில் யானை
ஆட்டம் போடுது!

கோடிக் கரையில் காட்டில் எல்லாம்
பார்த்தேன் மகிழ்ந்துமே!
குந்திப் பேச எதுவும் வரலே
கொஞ்சம் வருத்தமே!

- பி.புலேந்திரன்,
திருவாரூர்

பலூன்காரர்

'பலூன்' என்று குரலெழுப்பி
பலூன்காரர் வருகிறார்.
பலூன் கொண்டு வருகிறார்
பார்த்துவிட்டான் பாலுவும்!

'அம்மா பலூன்' என்றுமே
அவசரமாய்க் கூவுவான்.
''சும்மா இரு' என்றாலோ
சிணுங்கிப் பின்னே ஓடுவான்.

அருகிலுள்ள வீடெலாம்
'அம்மா பலூன்' எனும் குரல்.
தெருவில் இறங்கிப் பிள்ளைகள்
தாயைத் தாண்டி ஓடுவார்.

வந்த சிறுவர் கைகளில்
வண்ண பலூன் தருகிறார்.
சின்னப் பையன் பாலுவும்
சிவப்பு பலூன் வாங்கினான்!

- மு.பாலசுப்பிரமணியன்,
புதுச்சேரி



எலும்பை வலுவாக்கும் உணவுகள்!



எலும்புகள் வலுவாக இருந்தால் தான், நம்மால் எந்த வேலையையும் எளிதாகச் செய்யமுடியும். பார்ப்பதற்கு எலும்புகள் கடினமான உறுப்புகள் போலிருக்கும். என்றாலும், அவையும் ஒருவகைத் திசுக்களால் ஆனவையே.

தசைகளோடு இணைந்துள்ள எலும்புகள், உடலின் வடிவத்துக்கும் இயக்கத்துக்கும் உதவுகின்றன. எலும்பினுள் உள்ள எலும்பு மஜ்ஜை, ரத்த அணுக்களை உற்பத்தி செய்து புதிய ரத்தம் உருவாக உதவுகிறது. உடல் வளர்ச்சிக்குத் தேவையான புதிய செல்களை உருவாக்குவதும், பழைய செல்களை அழிப்பதும் எலும்பின் வேலை தான். குறிப்பாக, வளரும் பருவத்தில் உள்ள குழந்தைகளுக்குப் புதிய செல்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்படி பார்த்துக் கொள்பவை எலும்புகளே.

கால்ஷியம் அவசியம்!

எலும்புகள் திடமாக வளர வேண்டுமானால் கொலாஜன், கால்ஷியம் மற்றும் பாஸ்பரஸ் சத்துகள் அவசியம். வயதுக்கு ஏற்ப, வெவ்வேறு அளவுகளில் இவை தேவைப்படும். சிறுவர்களுக்குத் தினமும் சராசரியாக 1200 மி.கி. கால்ஷியம் சத்து தேவைப்படுகிறது. இதை ஒரு வேளை உணவில் 400 மி.கி. அளவில் எடுத்துக்கொள்ளலாம்.

பால் சாப்பிடுங்கள்!

200 மி.லி. பாலில் 300 கிராம் கால்ஷியம் உள்ளது. காலை, மாலை, இரவு என மூன்று வேளை பால் சாப்பிட்டாலே தேவையான அளவு கால்ஷியம் கிடைத்துவிடும். பால் சாப்பிடப் பிடிக்காதவர்கள் மோர், தயிர், பாலாடை, பால்கோவா, வெண்ணெய் என்று பாலில் தயாரிக்கப்பட்ட எந்த உணவையும் சாப்பிட்டுக் கொள்ளலாம். அசைவப்பிரியர்கள் கெலுத்தி, நெத்திலி, வஞ்சரம், மத்தி போன்ற மீன்களைச் சாப்பிடலாம். மீன் உணவு எலும்புக்கு மட்டுமல்ல; இதயத்துக்கும் நல்லது.

கீரைகளிலும் கால்ஷியம் உண்டு!


கீரைகளில் முள்ளங்கிக்கீரை, பசலைக் கீரை, புதினா, கறிவேப்பிலை, கொத்தமல்லி போன்றவற்றில் கால்ஷியம் சத்து அதிகம். வாரம் இருமுறை கீரை, மற்ற நாட்களில் புதினா சட்னி, கொத்தமல்லி சட்னி என்று விதவிதமாகச் சாப்பிட்டால் உணவு போரடிக்காது. பாலில்

டாக்டர் கு.கணேசன்

வேக வைத்த ஓட்ஸ் கஞ்சி கால்ஷியம் நிறைந்தது. அவ்வப்போது காலை உணவில் அதைச் சேர்த்துக் கொள்ளலாம்.

சிற்றுண்டியில் கால்ஷியம்!

தர்பூசணியில் கால்ஷியம் நிறைவாக உள்ளது. மாலை நேரங்களில் விளையாடிக் களைத்து வரும்போது, தர்பூசணியை அதிக அளவில் சேர்த்துக் கொள்வது நல்ல பலன் தரும். தவிர பட்டாணிக்கடலை, பொரிகடலை, எள்ளுருண்டை, முந்திரிப் பருப்பு, பாதாம் பருப்பு, போன்றவற்றை மாலைச் சிற்றுண்டியில் சாப்பிடலாம். இவற்றிலும் கால்ஷியம் அதிகம் உள்ளது.



வைட்டமின் டி முக்கியம்!

என்னதான் கால்ஷியம் நிறைந்த உணவுகளைத் தேடிப்பிடித்துச் சாப்பிட்டாலும், அவை குடலில் கிரகிக்கப்படுவதற்கு வைட்டமின் டி சத்து தேவை. அது சூரிய ஒளியிலிருந்து கிடைக்கிறது. வெயிலில் விளையாட விரும்பாத சிறுவர் சிறுமிகள், உடல் முழுவதும் ஆடை அணிபவர்கள், கருத்தத் தோல் உடையவர்கள், காரில் மட்டுமே பயணிப்பவர்கள், வீட்டிலேயே முடங்கிக் கொள்பவர்கள் போன்றோருக்கு வைட்டமின் டி குறைவாக இருக்கும் என்பதால், அவர்களுக்குக் கால்ஷியம் அளவும் குறைந்துவிடும்.

'ரிக்கெட்ஸ்' நோய் ஆபத்து!

உடலில் கால்ஷியம் அல்லது வைட்டமின் டி குறையும்போது 'ரிக்கெட்ஸ்' எனும் நோய் வரும். இதன் விளைவாக எலும்புகள் சரியாக வளராது. குறிப்பாக, கால் எலும்புகள் வளைந்து விடும். அவற்றில் வலிமை இருக்காது. ஆகவே, தினமும் சிறிய அளவிலாவது சூரிய ஒளி நம் உடலில் படும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

எலும்புகளின் எதிரி!

நாம் விரும்பிச் சாப்பிடும் சில மென் பானங்களில், பாஸ்பாரிக் அமிலம் உள்ளது. இது ரத்தத்தில் அமிலத் தன்மையை அதிகமாக்கும். அப்போது அதை சரி செய்ய கால்ஷியம் எலும்புகளிலிருந்து விலகி ரத்தத்துக்குச்

சென்றுவிடும் இதனால் எலும்புகள் வலுவிழக்கும்.

ஆகையால், மென்பானங்களுக்குப் பதிலாக பால், மோர், லஸ்ஸி, ஆரஞ்சுச் சாறு, திராட்சைச்சாறு, எலுமிச்சைச்சாறு போன்றவற்றைக் குடிக்கலாம். இந்தப் பழச்சாறுகளில் வைட்டமின் சி அதிக முள்ளது. எலும்பு மூட்டுகளில் கொலா ஜன் சரியான அளவில் இருந்தால்தான் மூட்டுவலி வராது. கொலாஜன் உற்பத் திக்கு வைட்டமின் சி தேவை. மாலை வேளைகளில் பழச்சாறுகள் குடிப்பதை வழக்கப்படுத்திக் கொண்டால், வயதான காலத்தில் மூட்டுவலி வருவதைத் தடுக்கலாம்.

தவிர, முறுக்கு, சிப்ஸ், உப்பு கலந்த பிற நொறுக்குத் தீனிகள், டின்களில் அடைத்து விற்கப்படும் பலகாரங்கள் போன்றவையும் எலும்புகளிருந்து கால் ஷியம் சத்தை நீக்கிவிடும் ஆபத் துள்ளவை. ஆகவே, இவற்றையும் குறைவாகவே சாப்பிட வேண்டும்.

உடற்பயிற்சியும் தேவைதான்!

எலும்புகள் உறுதியாக இருப்பதற்கு இதுவரை சொன்ன சத்துகள் சரியாக இருந்தால் மட்டும் போதாது. உடற் பயிற்சிகளும் அவசியம். நடைப் பயிற்சி, மெல்லோட்டம், எடை தூக்கும் பயிற்சி போன்றவற்றையும் செய்து வந்தால், கூடுதல் நன்மை கிடைக்கும். பள்ளிக் குழந்தைகள் பள்ளிகளில் விளை யாட்டு நேரங்களைச் சரியாகப் பயன் படுத்திக் கொண்டாலே போதும், பெரும் பாலோருக்கு எலும்புகள் வலிமை பெற் றுவிடும். சிறுவயதிலிருந்தே உடற் பயிற்சி செய்து வருபவர்களுக்கு, முது மையில் முழங்கால் மூட்டுவலி வருவ தில்லை என்பது கூடுதல் நன்மை. ●

வாழ்த்துகள்!

பெயரைச் சொல்; பரிசை வெல்-2-ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.



சரியான விடைகள் :

1.கலிலியோ, 2.சுதந்திரதேவி, 3.போர்ட் ஜாக்சன்

பரிசு பெறுவோர் :

1.கார்த்திகேகவன், கோவை 2.பி.ஆர்.பாலாஜி, தஞ்சாவூர் 3.பா.கிருபாகரி, கீழ்ப்பென்னாத்தூர் 4.ஆர்.எஸ்.சௌமிய நாராயணி, இராமநாதபுரம் 5.கே.வி.ஆனந்த், கன்னியாகுமரி 6.ஜி.சதீஷ், ஆரணி 7.கி.அகிலா, வேலூர் 8.எம்.அனிஸா பேகம், கோபிசெட்டிபாளையம் 9.தி.மு.மதுவந்தன், திருச்சி 10.த.ஞானசெல்வன், மும்பை

அறிவுச் சுரங்கம்!

ராகவன்

தகவல் புதையல்

ஆசிரியர் வாண்டுமாமா. வெளியீடு: கங்கை புத்தக நிலையம், 23 தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017. விலை ரூ.250/-

கடல் வாழ் உயிரினங்கள், விலங்குகள், தாவரங்கள் என்று பலதரப்பட்ட விஷயங்களைப் பற்றிய சிறந்த அறிமுகம், இந்த நூல். சின்னஞ்சிறு பூச்சிகள் முதல் பல்லிகள், ஈக்கள், முதலைகள், பாம்புகள் என்று இனம் வாரியாக, தனித்தனிப் பகுப்புகளுடன், படங்களுடன் கூடிய அருமையான புத்தகம். உதாரணமாக, பங்கோலின் (Pangolin) பற்றிய செய்தி : இது, பார்க்க ஊர்ந்து செல்லும் விலங்கு போன்றே இருக்கும். உடல் முழுதும் செதில்கள் காணப்படும். ரோமம் கிடையாது. ஒரு அடி நீளம் கொண்ட நாக்கு மட்டுமே; பற்களே இதற்குக் கிடையாது. உணவு, எறும்புகள், கரையான்கள்... என அற்புதமான அறிவுச் சுரங்கத்தை வழங்கியிருப்பவர் நம் வாண்டுமாமா!







பாழடைந்த பங்களா

ஆசிரியர் : ஸ்ம்ரித்தி ராம். வெளியீடு : சிவாலயம் நூல் வெளியீட்டாளர்கள். 14, கைலாஷ் நகர் முதல் தெரு, பாக்கமுடையான்பட்டு, புதுச்சேரி-8. விலை ரூ.45/-

குழந்தைகளை சுவாரஸியப்படுத்தும் விதமாக எழுதப்பட்ட நாவல். பூனை, புலி, மான் என்று விலங்கினங்கள்; சூனியக்கிழவி, பெரிய சாமியார் என்று பயங்கரங்கள். பூனைக் கடவுள், சிவயோகிகள் என்று நல்லவருக்கு உதவுபவர்கள். இவர்களைத் தவிர, மயானக் காவல் புரியும் பாக்கியம், இளவரசன் என்று பலரை, சிற்றன்னையின் கொடுமையால் வெளியேறும் வசுந்தரா சந்திக்கிறாள். அவள், சூழ்நிலைகளை எதிர்கொண்டு எப்படி வென்றாள் என்பதை அழகுறச் சொல்லியுள்ளார் ஆசிரியர்.

சமயம் வளர்த்த சான்றோர்
காரைக்கால் அம்மையார்

ஆசிரியர் : மா.கமலவேலன். வெளியீடு : பழனியப்பா பிரதர்ஸ், 'கோனார் மாளிகை', 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014. விலை ரூ.30/-

'அம்மையே' என்று இறைவனாலேயே அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையின் வரலாற்றை, இன்றைய காலத்துக்கும் ஏற்றமாதிரி அழகுறப் படைத்திருக்கிறார் ஆசிரியர். கதைப் போக்கிலேயே, காரைக்காலின் அமைவிடம், வரலாறு... எல்லாம் கலந்துள்ளன. அழகான நடை; நிறைவான செய்திகள்!

வால் பையன்!

சூரியனில் போய் மோதுற அளவுக்கு யாருக்கு தைரியம் வரும்? வால் நட்சத்திரத்துக்குத்தான். கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், சூரியன் மீது வால் நட்சத்திரம் மோதுகிற அரிய காட்சியை முதன் முதலாகப் படம் பிடிச்சிருக்காங்க. வால் நட்சத்திரங்களை ஆங்கிலத்தில் காமெட் (comet) என்று சொல்வார்கள். வால் நட்சத்திரத்தின் பரப்பளவு 100 மீட்டர் தொடங்கி 40 கிலோ மீட்டருக்கும் அதிகமாகக் காணப்படும். இவை பாறை, தூசு மற்றும் உருகிய பனிக்கட்டியைக் கொண்டவை. இவற்றில் கார்பன் மோனாக்சைடு, கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன் மற்றும் அம்மோனியா போன்ற வாயுக்கள் உள்ளன. 2009ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 3648 வால் நட்சத்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பழங்காலத்திலிருந்தே, இங்கே எரிந்து வீழ்வதைப் பார்ப்பது கெட்ட சகுனமாகக் கருதப்படுகிறது.



ஷேக்ஸ்பியர் நாடகம் பார்க்கலாமா?

ஷேக்ஸ்பியர் படைத்த கதாபாத்திரங்களை விண்வெளியில் பார்க்கலாம். குழப்பமா இருக்கில்ல? யுரேனஸ் கோளுக்கு மொத்தம் 27 நிலாக்கள் உள்ளன. இவை அனைத்துக்கும் ஷேக்ஸ்பியர் மற்றும் அலெக்ஸாண்டர் போப் ஆகியோரின் கதாபாத்திரப் பெயர்களே இடப்பட்டுள்ளன. இந்த நிலாக்களில் மிராண்டா, ஏரியல், உம்பிரியல், டைட்டானியா மற்றும் ஓபிரோன் ஆகியவை முதன்மையாகக் கருதப்படுகின்றன. 'மிராண்டா', 'டைட்டானியா', 'ஓபிரோன்' ஆகியவை ஷேக்ஸ்பியர் தம் நாடகத்தில் படைத்த கதாபாத்திரங்கள். இவற்றில் மிகப் பெரிய நிலா டைட்டானியா. சூரிய மண்டலத்தில் எட்டாவது பெரிய நிலா இது.

எவரெஸ்ட்டை விட உயரம்!

எவரெஸ்ட்டை விட உயரமான மலைகள் நிலவில் உள்ளன. இவை

நிலவின் தென் துருவத்தில் அமைந்துள்ளன. 10,660 மீட்டர் உயரமான இவற்றுக்கு 'லீப்னிட்ஸ்' எனப் பெயரிட்டுள்ளனர். தத்துவம், கணிதம் ஆகிய துறைகளில் வல்லமை பெற்றிருந்தவர், ஜெர்மானியப் பல்கலை வல்லுநரான 'லீப்னிட்ஸ்'. கணிதத்தில் கால்குலஸ், பைனரி சிஸ்டம் ஆகியவை இவரின் முக்கியமான கண்டுபிடிப்புகளாகும்.


ஷேக்ஸ்பியர்
ராகேஷ் சர்மா
வால் நட்சத்திரம்

'பைனரி முறை' இன்றைய நவீன கணினித் துறையில் மிக முக்கியமான பங்காற்றுகின்றது. இனி, நம் மாணவர்கள் 'லீப்னிட்ஸ்' மலைகளைத் தொடுவோம்னு சொல்வாங்களோ?

முதல் இந்தியர்!

விண்வெளிக்குச் சென்ற முதல் இந்திய வீரர் ராகேஷ் சர்மா. உலக அளவில் 138-வது வீரர். இராஜஸ்தானில் உள்ள ஜெய்ப்பூரில் 1949ஆம் ஆண்டு பிறந்த இவர், இந்திய விமானப் படையில் சேர்ந்தார். படிப்படியாகப் பதவி உயர்வுகள் பெற்றார். பிறகு இந்தியா - ரஷ்யக் கூட்டு விண்வெளி முயற்சிகளின் அடிப்படையில் ஏப்ரல் 2, 1984ஆம் ஆண்டு 'சோயுஸ் டி-11' விண்கலத்தில் பறந்து சென்றார். அப்போது அவருக்கு வயது 35. தொடர்ந்து எட்டு நாட்கள் விண்வெளியில் ஆய்வு மேற்கொண்டார். சோவியத் யூனியன், அவருக்கு 'ஹீரோ ஆப் சோவியத் யூனியன்' என்ற விருதையும், இந்தியா, அசோக சக்ரா விருதையும் வழங்கிக் கௌரவித்தன. ●

சம்பவம்




அண்ணல் காந்தியிடம் பெரும் ஈடுபாடு கொண்டவர் வினோபா. அவரை 'ஆச்சார்ய வினோபா' என்று கூறுவார்கள். காந்திஜியிடமிருந்து வரும் கடிதங்கள் அனைத்தையும் பாதுகாத்து வைத்திருப்பார். ஒருமுறை மகாத்மாவிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. படித்த வேகத்தில் அதைக் கிழித்துப் போட்டுவிட்டார்.

அதைப் பார்த்த ஜம்னாலால் பஜாஜ், "நீங்கள் கிழித்துப் போடும் அளவுக்கு, மகாத்மா அப்படியென்ன எழுதிவிட்டார்?" என்று கேட்டார். அதற்கு வினோபா சொன்னார்: "நான் வருத்தப்படும் அளவுக்கு ஒன்றும் எழுதிவிடவில்லை. மாறாக,

எளிமை

அமெரிக்காவின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவர் ஆபிரகாம் லிங்கன்; அமெரிக்க அதிபராகவும் விளங்கியவர். ஒருமுறை, இவரைக் காண, இவருடைய அமைச்சர்களில் ஒருவர் வந்தார். அறையினுள்ளே நுழைந்த அவர் ஆச்சர்யப்பட்டார். காரணம், லிங்கன் தம்முடைய ஷூவுக்குப் பாலீஷ் போட்டுக்கொண்டிருந்தார். "மற்ற வேலையை விட்டுவிட்டு, நீங்கள் ஏன் உங்கள் ஷூவுக்குப் பாலீஷ் போடும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்றார் அதிர்ச்சியுடன்.

லிங்கன் சிரித்துக்கொண்டே கேட்டார்: "அப்படியென்றால், மற்றவர்களின் ஷூவுக்குப் பாலீஷ் செய்து கொடுக்கும்படிச் சொல்கிறீர்களா?" அதைக் கேட்ட அமைச்சர், பதில் சொல்ல முடியாமல் திகைத்தார். லிங்கன் தொடர்ந்து, "நம்முடைய வேலையை நாம்தான் செய்ய வேண்டும். இதில் வெட்கப்பட ஏதுமில்லை" என்றார் நிதானமாக.



- எம்.மிருணாளினி,
உ.எண்.1567,
மதுரை.



அடக்கம்

என்னை மகான் என்று - தமது பெருந்தன்மையால், புகழ்ச்சியாக எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தைப் பாதுகாத்து வைத்தால், நாளடைவில் என்மனம் கெடும்; குணங்களும் மாறுபடும். அதனால்தான் கிழித்துப் போட்டுவிட்டேன்.''

தன்னைப் பெரிதெனக் கருதாத வினோபாஜியின் அடக்கத்தைக் கண்ட ஜம்னாலால் பெரிதும் வியந்தார்.

- ஜி.எஸ். சபரி,
உ.எண். 1475, கோபி

எங்கே போனாலும்...

பத்திரிகையாளர் சந்திப்பு நடந்து கொண்டிருந்தது. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சளைக்காமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தார் மகாத்மா. அப்போது ஒரு நிருபர் கேட்டார்: ''பாபுஜி, நீங்கள் இறந்தால் சொர்க்கத்துக்குப் போவீர்களா? அல்லது நரகத்துக்குப் போவீர்களா?''

இத்தகைய கேள்வியை எதிர்பாராத அனைவரும் திடுக்கிட்டார்கள். ஆனால், அதற்கும் தயக்கமில்லாமல் பதில் சொன்னார் மகாத்மா: ''அது எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் தெரியும். நான் எங்கே போனாலும், அங்கே என்னுடன் பத்திரிகையாளர்கள் இருப்பார்கள்.''

அதைக் கேட்ட வினாடியில், சூழலின் இறுக்கம் குறைந்து அனைவரும் கலகலவென்று சிரித்தார்கள்.

- ஆர்.பிரதீப் ராகுல்,
ஒன்பதாம் வகுப்பு,
மகரிஷி வித்யா மந்திர்
மேனிலைப்பள்ளி,
சென்னை



ஆரோக்கியம்

இனிக்கும் இலை!



இனிப்பு என்று சொன்னால், நமக்கு கரும்பு, வெல்லம், சர்க்கரை, அல்லது பலகாரங்கள்தாம் நினைவுக்கு வரும். ஆனால், பராகுவே நாட்டில் உள்ள ஒரு செடியை 'இனிக்கும் தாவரம்' என்கிறார்கள். ஸ்டீவியா ரெபாடியானா (Stevia rebaudiana) என்ற பெயர் கொண்ட இந்தத் தாவரத்தில் இருந்து எடுக்கப்படும் இனிப்புச் சுவை, சர்க்கரையைவிட 300 மடங்கு அதிகம் என்கிறார்கள். எனவே, சர்க்கரைக்கு மாற்றாகவும் இது பயன்படுத்தப்படுகிறது.

இப்போது உலகின் பல்வேறு நாடுகளிலும் பயன்படுத்தப்படுகிறது ஸ்டீரியா. இதன் இனிப்புத் திறனை முதன் முதலில் ஆராய்ந்து கண்டறிந்தவர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பெட்ரோ ஜெய்ம் ஸ்டீவ் (Pedro Jaime Esteve). அவருடைய பெயரைக் கொண்டே, இந்தத் தாவரத்துக்கு 'ஸ்டீவியா' என்று பெயரிடப்பட்டது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பராகுவே, பொலிவியா மற்றும் பிரேஸிலில் வாழ்ந்த பழங்குடியினர் இதன் பயனை அறிந்திருந்தனர். உடலின் அதிகப் பருமனைக் குறைக்கவும், உயர் ரத்த அழுத்தத்தைக் குறைக்கவும், இன்றைய மருத்துவத்தில் ஸ்டீவியா பயன்படுத்தப்படுகிறது.

சூரிய காந்தி குடும்பத்தைச் சேர்ந்தது இந்த மருத்துவப் பயிர். இதிலிருந்து எடுக்கப்படும் 'ஸ்டீவியோ சைட்' மற்றும் 'ரிபோடிசைட்' சர்க்கரைக்கு மாற்றாக உணவில் பயன்படுத்தப்படுகிறது. மிகக் குறைந்த சர்க்கரை மற்றும் மாவுச் சத்து கொண்ட இந்தப் பொருட்கள், நீரிழிவு, கொழுப்புச் சத்து தொடர்பான நோயுள்ளவர்களுக்கும் - உணவுக் கட்டுப்பாட்டிலும் பயன்படுத்தப்படுகின்றன.

ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிரேஸில், பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா உள்பட உலகின் பல நாடுகள், இந்த ஸ்டீவியாவை பயன்பாட்டில் கொண்டிருக்கின்றன. அதே சமயம், பிரான்ஸைத் தவிர மற்ற ஐரோப்பிய நாடுகள், சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் ஆசிய நாடுகள் இந்த ஸ்டீவியாவைப் பயன்படுத்தத் தடை விதித்துள்ளன. என்றாலும், உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation) ஒரு நபர் தன் எடையில் ஒரு கிலோவுக்கு 4 கிராம் வீதம், ஸ்டீவியா கிளைகோசைட் (Stevia Glycoside) சாப்பிடலாம் என்று அறிவித்துள்ளது.

சரி; இந்தியாவில் இதன் பெயர் என்ன தெரியுமா? வடமொழியில் மதுபத்ரம், மராத்தியில் மதுபரணி, தெலுங்கில் மதுபத்ரி. தமிழில்... சீனி துளசி!

- ராம்


இந்தத்
தாவரத்திலிருந்து
எடுக்கப்படும்
இனிப்புச் சுவை,
சர்க்கரையை விட
300 மடங்கு
அதிகம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka